விலை ரூபா: 7.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்:- பன்னிரண்டு

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | மார்கழி 04 | ஞாயிற்றுக்கிழமை (19.12.2004) | தொலைபேசி 2223378, 2227644 | ஒலி 366

புதுப் பொலிவுடன் திருநெல்வேலியில்

WESTERN UNION பணப் பரிமாற்றம்

* விரைவானது * பாதுகாப்பானது * நம்பகமானது

இப்பொழுது உலகின் எப்பாகத்திலிருந்தும் மிக துரிதமாக பணத்தினை பெற்றுக்கொள்வதற்கு

♦பணம் பெறுவதற்கு வங்கிக்குப் போகத் தேவையில்லை
♦வங்கிக் கணக்கு அவசியமில்லை
♦நீடிக்கப்பட்ட சேவை நேரம்
♦365 நாள் சேவை
♦10 (MTCN) இலக்கங்களைப் பெற்றவுடன் எம்மை நாடவும்

THIRUMURUGAN COM NET

T.P. 021 2227310
021 2227555
021 2227560
FAX 021 2227310
E-mail: thirumurugan@eudoramail.com

46, ஆடியபாதம் வீதி, (ப.நோ.கூ.ச. முன்பாக) திருநெல்வேலி யாழ்ப்பாணம்

## சர்வதேச அழுத்தம் அதிகரிப்பு

# சமாதானப் பேச்சை ஆரம்பிக்க

# ஸ்ரீ.சு.கவின் மத்தியகுழு தீர்மானம்

## ஜனாதிபதி சந்திரிகா தலைமையில் விசேடகுழு ஒன்றும் அமைப்பு

(நமது நிருபர்)

**சர்வதேச அழுத்தங்கள் அதிகரித்த நிலையில் தடைப்பட்டுப் போயுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழு கூடித் தீர மானித்துள்ளது.**

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையில் நேற்று முன்தினம் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் நடைபெற்றது. இக் கூட்டத்திலேயே சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் குறித்து பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன தெரிவிக்கையில்,

சமாதானப் பேச்சுவார்த்தைகளை உடன் ஆரம்பிப்பதற்குத் தடையாகவுள்ள காரணிகளை அகற்றுவதற்குத் தீர்மானித்துள்ளோம். இது விடயம் குறித்து ஆளும் கூட்டமைப்பு அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் சகல கட்சிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்தி இணக்கப்பாடு ஒன்றை எட்டுவதற்குத் தீர்மானித்துள்ளோம்.

மேலும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய மாநாட்டை எதிர்வரும் ஜனவரி 30 ஆம் திகதி கொழும்பில் கூட்டவுள்ளோம். இம் மாநாட்டில் கட்சியின் அரசியல் வேலைத் திட்டங்கள் தொடர்பாகவும் சமாதான முன்னெடுப்புக்கள் தொடர்பாகவும் தீர்க்கமான முடிவுகள் அறிவிக்கப்படும்.

எதிர்கால அரசியல் வேலைத் திட்டங்களை முன்னெடுப்பதற்கான திட்டவரைபு

(12 ஆம் பக்கம் பார்க்க)

## எரிக் சொல்ஹெய்முக்கு இம்முறை புதிய அனுபவங்கள்

### 30 நிமிடங்கள் நூலகத்தில் தவிப்பு

(கொழும்பு)

நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் இம்முறை இலங்கைக்கு மேற்கொண்ட விஜயத்தின்போது என்றுமில்லாதவாறு சில புதிய அனுபவங்களுக்கு முகம் கொடுக்க நேரிட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனைச் சந்திப்பதற்காக கிளிநொச்சிக்கு பயணம் மேற்கொள்ள, இலங்கை விமானப் படை உலங்கு வானூர்தி வழங்க மறுத்திருந்தது. ஆனால் பின்னர் அதனை அளித்திருந்தது.

இருந்தபோதிலும் கொழும்பில் இருந்து புறப்பட்ட சொல்ஹேய்ம் சென்ற உலங்கு வானூர்தி சீரற்ற காலநிலை காரணமாக அநுராதபுரத்தில் உள்ள தலாவை அரசினர் பாடசாலை மைதானத்தில் தரையிறக்கப்பட்டது.

அங்கிருந்து தனியார் வாகனமொன்றிலேயே வவுனியா சென்று அங்கிருந்து அரசாங்க வாகனமொன்றில் கிளிநொச்சி சென்று கொழும்பு திருப்பினார்.

ஆனால் வழமையாக சொல்ஹெய்மின் பயணத்திற்கு நோர்வேத் தூதுவராலய வாகனங்களே பயன்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

கிளிநொச்சியிலிருந்து திரும்பியதும் அன்றிரவே ஜனாதிபதியை சந்திக்கவிருந்த போதிலும் போக்குவரத்தில் ஏற்பட்ட தாமதம் காரணமாக அந்த சந்திப்பு இடம்பெறவில்லை.

தலாவை அரசினர் பாடசாலை மைதானத்தில் உலங்குவானூர்தி இறக்கப்பட்ட

(12 ஆம் பக்கம் பார்க்க)

# வடக்கு - கிழக்கிற்கு அனுப்பப்பட்ட மாமூடைகள் புறக்கோட்டையில் மீட்பு

(கொழும்பு)

வடக்கு கிழக்கு மாகாணத்தில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களுக்கு வழங்குவதற்காக உலக உணவுத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கோதுமை மாமூடைகள் புறக்கோட்டையிலும் மஸ்கெலியாவிலும் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளன.

வறிய மக்களுக்கு நிவாரணமாக பகிர்ந்தளிப்பதற்காக வழங்கப்பட்ட 236 கோதுமை மாமூடைகள் புறக்கோட்டையில் உள்ள வர்த்தக நிலையமொன்றில் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக புறக்கோட்டைப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சி.ஐ.விஜயசேன தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்ட நபர்களின் தகவல்களின்படி மஸ்கெலியாவிலும் பெருமளவான மாமூடைகள் கைப்பற்றப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவல் ஒன்றின் அடிப்படையிலேயே இம் மாமூடைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைப்பற்றப்பட்ட மாமூடைகள் வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள வறிய மக்களுக்கு பகிர்ந்தளிப்பதற்காக வழங்கப்பட்டதாக பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. (த-04)

## சுவரொட்டிகள்

தமிழ் மக்கள் மத்தியில் போராட்ட விழிப்புணர்வை தூண்டும் வகையில் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருக்கின்றன.

குறிப்பாக வடமராட்சி, கல்வியங்காடு, நல்லூர், திருநெல்வேலி, உரும்பிராய், தென்மராட்சி போன்ற இடங்களில் மேற்படி சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

சிந்திக்க நேரமில்லை, தேசத்தைக் காக்க போராடத் தயாராகுங்கள், எதிரியுடன் உறவு கொள்வதைத் தவிருங்கள். இராணுவப் புலனாய்வாளர்களுடன் தொடர்பு வைக்க வேண்டாம் போன்ற வாசகங்கள் அடங்கிய சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

(ப-74-101-130)

# அரசுக்கு எதிரான செயற்பாடுகளுக்காக 250 இளைஞர் மலையகத்திற்குள் ஊடுருவல்

## இது வெறும் புரளி என்கிறார் சந்திரசேகரன்

(கொழும்பு)

மலையகத்தில் தீவிரவாத சக்திகள் ஊடுருவியுள்ளதாக மலையக தொழிற்சங்கம் ஒன்று தெரிவித்துள்ள குற்றச்சாட்டு உண்மைக்கு புறம்பானது என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான பெ. சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

நுவரெலியாவில் இடம்பெற்ற விருந்து நிகழ்ச்சி ஒன்றில் பொலிஸாரையும் தோட்ட நிர்வாகிகளையும் சந்தித்து இந்த விடயத்தை மலையக தொழிற்சங்கம் ஒன்றின் முக்கியஸ்தர்கள் தெரிவித்துள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

மலையகத்தில் அரசாங்கத்திற்கு எதிரான சக்திகள் ஊடுருவி உள்ளதாகவும் சுமார் 250 இளைஞர்கள் இவ்வாறு மலையகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் மலையக தொழிற்சங்கம் ஒன்று பாதுகாப்புத் தரப்புக்கு அறிவித்துள்ளது.

இதனை அடுத்து மலையகத்தில் பாதுகாப்பு நடடிவடிக்கைகள் தீவிரப்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விடயம் தொடர்பில் மலையக மக்கள் முன்னணி தலைவர் பெ.சந்திரசேகரன் மேலும் கருத்து வெளியிடும்போது, இது தமிழர்களுக்கு எதிராக சக்திகளின் மற்றும் ஒரு நடவடிக்கையாகும்.

மலையக சமூகத்தில் புதிய சிந்தனை ஏற்படும் போதெல்லாம் இவ்வாறான செயற்பாடுகள் மூலம் அதனை நசுக்கி வந்த இந்த தொழிற்சங்கம் தற்போதும் இதனையே மேற்கொண்டுள்ளன.

இது தமது சுயநல செயற்பாடுகளுக்கு குந்தகம் விளைவிக்கும் என நினைப்பதே இதற்கான காரணமாகுமெனத் தெரிவித்தார். (த-04)

# மூன்றாம் தரப்பில் தங்கியிராமல் வீட்டுக்குள்ளே தீர்வை காணுங்கள்

### இந்திய வெளிநாட்டு கொள்கை சபைத் தலைவர்

இலங்கை அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகளும் இரு தசாப்த காலமாக நிலவி வரும் இனப்பிரச்சினைக்கு சமாதானத் தீர்வொன்றை சமாதான முறையில் அவர்களாகவே பேசித் தீர்வுகாண முன்வரவேண்டுமென இந்தியா வெளிநாட்டுக் கொள்கை சபையின் தலைவர் கலாநிதி பிரட் வைத்திக் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் "ஜனநாயகம் சமாதானத்தை நோக்கி" என்ற கருப்பொருளில் கொழும்பில் நேற்று இடம்பெற்ற சர்வதேச மாநாடு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண இரு தரப்பும் ஆர்வமாகவே இருக்கின்றன. ஆனால் அதற்கு மூன்றாந் தரப்போ அல்லது வெளியார் மத்தியஸ்தத்திலோ தங்கியிராமல் தமக்குள்ளேயே தீர்வினை ஏற்படுத்திக்கொள்வதே சிறந்த வழியாகும்.

வன்செயலானது சமாதானத்தை ஒருபோதும் கொண்டுவரமாட்டாது என்பதை வன்செயலில் இதுவரை காலமும் ஈடுபட்ட வந்த விடுதலைப் புலிகள் கருத்தில் கொண்டு சமாதானத்திற்காக பாடுபடவேண்டும் என அவர் வலியுறுத்தினார்.

தற்போது நிலவிவரும் அமைதிச் சூழ்நிலையை வைத்துக கொண்டு நிரந்தரமான சமாதானத்தை ஏற்படுத்த இரு தரப்பினரும் விட்டுக்கொடுப்புடன் பாடுபடவேண்டும். அதற்கு வெளித்தரப்பின் எந்தவிதமான உதவியையும், அறிவுறுத்தல்களையும் பெறாமல் தமது எண்ணத்திற்கு அமைய செயற்பட்டால் நிச்சயமாக சமாதானத்தைக் காணலாம் என அவர் மேலும் தெரிவித்தார்.

(த-04)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள்

# நன்மை நடந்தால் அரசுக்கு புகழ் தீமை நடந்தால் ஐ.தே.க. பொறுப்பு



## வேடிக்கை என்கிறார் மகேஸ்வரன்

(கொழும்பு)

**பாராளுமன்ற அதிகாரத்தில் தலையிடுவதற்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு அதிகாரமில்லை.**

**ஜனாதிபதி எமது கட்சி எம். பிக்களை திருத்தும் நடவடிக்கைகளை விடுத்துத் தனது கட்சி எம்.பிக்களைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான தி.மகேஸ்வரன் தெரிவித்தார்.**

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கட்சி ஒன்றின் தலைவியாக செயற்படாது நாட்டின் தலைவியாக செயற்படவேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டபோது இதனை எம்.பி. மகேஸ்வரன் தெரிவித்தார்.

இச் செய்தியாளர் மாநாட்டில் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதி செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்காவும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

மேலும், மகேஸ்வரன் எம்.பி. கூறியதாவது வரவு செலவுத்திட்ட குழுநிலை விவாதத்தின் சம்பவங்கள் தொடர்பாக ஜனாதிபதி என்மீது குற்றஞ்சாட்டியுள்ளார். இக் குற்றச்சாட்டுக்களை நான் முற்றாக நிராகரிக்கிறேன்.

இந்த அரசாங்கம் பதவி ஏற்றுப் பாராளுமன்றம் கூடியபோது அரசாங்கத் தரப்பினர் நடந்துகொண்ட முறையினை அனைவரும் அறிவார்கள். அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள் நடந்துகொண்ட முறையும் அனைவரும் அறிந்ததே. செங்கோலை இருதடவைகள் இவர்கள் தூக்கிச் சென்றனர். பௌத்தபிக்கு எம்.பிகள் மீது தாக்குதல் நடத்தினர். இவற்றையெல்லாம் நான் நினைவுகூர விரும்புகிறேன்.

சபாநாயகருக்கான வாக்கெடுப்பின்போது வாக்குப்பெட்டி மீது அரசாங்க எம்.பிக்கள் ஏறியிருந்தனர். ஆனால் ஐக்கிய தேசியக் கட்சியினரான நாம் அமைதியாகவே இருந்தோம். ஆனால் எமது கட்சியின் தேசிய அமைப்பாளரும் எம்.பியுமான எஸ்.பி. திஸநாயக்க முறையற்ற விதத்தில் சிறைக்கு அனுப்பப்பட்டார்.

இது குறித்து நாம் பாராளுமன்றத்தில் உரையாற்றும்போது குழப்பங்கள் விளைவிக்கப்பட்டன. சபையை ஒத்திவைக்குமாறு கோரியபோதும் அதற்கு இடமளிக்கப்படவில்லை. இவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவித்தே நாம் பாராளுமன்றத்தில் போராடினோம். சபையில் கொடுங்கோல் ஆட்சி நிலவியமையால் செங்கோலையும் அப்புறப்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது.

ஜனாதிபதி எமது கட்சி உறுப்பினர்களைக் கட்டுப்படுத்துவதனை விடுத்து அவரது கட்சி எம்.பிக்களைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும். வைத்திய நிபுணர் எஸ்.நரேந்திரனை கத்தியால் குத்திய அமைச்சர் ரோகித போகோல்லாகமவின் மனைவி இன்னமும் கைது செய்யப்படவில்லை. கத்திக் குத்துக்கு இலக்கான வைத்திய நிபுணருக்கு எதிராகவும் பொலிஸார் வழக்குத்தாக்கல் செய்துள்ளனர்.

இத்தகைய நிலையில் நாட்டில் நன்மை நடந்தால் அது அரசின் செயலெனவும், தீமை நடந்தால் ஐ.தே.கவின் செயல் எனவும் அரசாங்க ஊடகங்கள் மூலமாகக் கூறுவது மிக வேடிக்கையானது என்றார்.

(க-9)

# சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு ஜே.வி.பியின் ஆதரவைப் பெற முயல்கிறார் ஜனாதிபதி!

(கொழும்பு)

சமாதான முயற்சிகளுக்கு ஜே.வி.பியின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று ஜனாதிபதி நம்பிக்கை கொண்டிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்து செயற்படுவதைவிட ஜே.வி.பியுடன் பணியாற்றுவது இலகுவானது என்று ஜனாதிபதி கருதுவதாகவும், இந்த விடயம் தொடர்பில் ஜே.வி.பியுடன் முக்கிய பேச்சுவார்த்தையொன்றை மேற்கொள்ள ஜனாதிபதி தயாராகிவருவதாகவும் ஜனாதிபதி செயலகத்திற்கு நெருக்கமான வட்டாரங்களிலிருந்து தகவல் வெளியாகியுள்ளன.

சமாதான முயற்சிகள் தொடர்பில் பொ.ஜ.முன்னணி ஜே.வி.பி ஆகிய இரு பிரதான கட்சிகளுக்கும் இடையில் புரிந்துணர்வு உன்படிக்கை ஒன்றை மேற்கொள்வது குறித்து அரசாங்கம் ஆராய்ந்து வருவதாகவும், ஒருசில விடயங்கள் தவிர ஏனைய விடங்களில் இருதரப்பு உடன்பாடு காணப்பட்டதாகவும் தெரியவந்துள்ளது.

இருந்த போதிலும் உடன்பாடு காணப்படாத விடயங்களில் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதற்கு இரு தரப்பும் தடையாக இருக்கின்றது என்று நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் சுட்டிக் காட்டியுள்ளார்.

இருந்தபோதிலும் நடைமுறையில் உள்ள யுத்தநிறுதத உடன்படிக்கையை தொடர்ச்சியாக கடைப்பிடிப்பது தொடர்பில் இருதரப்பும் ஒருமித்த கருத்தை கொண்டிருப்பதாகவும் எரிக்சொல்ஹெய்ம் மேலும் தெரிவித்திருக்கின்றார்.

(க-9)

# பாதுகாப்பு உடன்படிக்கையில் கைச்சாத்திட இந்தியா பின்னடிப்பு

(டில்லி)

இலங்கையுடன் பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்படிக்கை எதனையும் உடனடியாக மேற்கொள்ளப்போவது இல்லை என்று இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் உறுதியளித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலஙகைத் தமிழ் மக்களின் நலன்களை நோக்காகக் கொண்டே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தியாவில் ஆளும் கூட்டணி அரசில் அங்கத்துவம் வகிக்கும் மறுமலர்ச்சித் திராவிட முன்னேற்றக் கழகப் பிரதிநிதிகளுடன் இடம்பெற்ற சந்திப்பில் இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங், இந்தக் கருத்தை வெளியிட்டுளளதாகவும் கூறப்படுகின்றது. இதற்கிடையில் மறுமலர்ச்சித் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் வை. கோபாலசாமி, இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் மற்றும் காங்கிரஸ் கட்சித் தலைவர் சோனியா காந்தி ஆகியோரைச் சந்தித்துப் பேசியுள்ளதாக இந்திய ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கையுடன் இந்தியா பாதுகாப்பு ஒப்பந்தம் செய்து கொண்டால் இலங்கைத் தமிழ் மக்கள் பெரும் பாதிப்படைவார்கள் என்பதை இந்தப் பேச்சுவார்த்தையில் வை.கோபாலசாமி சம்பந்தபட்டவர்களுக்கு எடுத்துக் கூறியதாகவும் அந்த ஊடகச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (க-9)

# கொழும்பில் பாதுகாப்பைப் பலப்படுத்த நவீனரக ராடர் தொகுதி பொருத்தப்படும்

## விமானப் படைத் தளபதி எயார் மார்ஷல் டொனால்ட் பெரேரா தெரிவிப்பு

(கொழும்பு)

கொழும்பினதும் அதனைச் சூழவுள்ள பகுதிகளினதும் பாதுகாப்பினை உறுதிப்படுத்தவும் வான்பரப்பின் பாதுகாப்பினைப் பலப்படுத்துவதற்காகவும் நவீனரக ராடர் தொகுதியை உடனடியாகக் கொழும்பில் பொருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுவருவதாக விமானப்படைத்தளபதி எயார் மார்ஷல் டொனால்ட் பெரேரா தெரிவித்துள்ளார்.

தியத்தலாவை விமானப் பயிற்சி முகாமில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், விடுதலைப் புலிகளின் வசம் தற்போது வான்படையொன்று இருப்பதாக வெளிநாட்டுத் தகவல் நிறுவனங்கள் தெரிவிக்கின்றன.

ஆனால் இது உண்மையா? இல்லையா? என்பது எமது விமானப்படைப் புலனாய்வுப் பிரிவால் இதுவரை உறுதிப்படுத்தப்படவில்லை.

1989 ஆம் ஆண்டு இந்தியப்படையினர் இங்கு நிலைகொண்டிருந்தபோது புலிகள் சிறியரக விமானமொன்றைத் தயாரிக்க முற்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டது. இதன் மூலம் சிறியரக விமானங்கள் புலிகளிடம் இருப்பது தெரியவருகிறது.

கடந்த காலங்களில் புலிகளின் விமான ஓடுபாதைகளை விமானப் படையினர் கண்டறிந்துள்ளதால் அவர்களிடம் வான்படையிருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் இலங்கையின் வான்பரப்பின் பாதுகாப்பை பலப்படுத்த விசேட ராடர் தொகுதியை அமைக்கத் தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

இது தற்போது விமானப் படையினரிடமிருக்கும் ராடர் தொகுதியைவிட மேலதிகமானதாயிருக்கும்.

புதிய ராடர் தொகுதியைப் பொருத்துவதன் மூலம் இலங்கையின் வான்பரப்புக்குள் நுழையும் எந்தவொரு வானூர்தியும் செல்லும் உயரம், வேகம், விமானத்தின் வகை போன்றன முக்கிய தகவல்களைப் பெற்று வந்த வானூர்திகளுக்கு எதிராக விரைந்து செயற்படமுடியும்.

விடுதலைப் புலிகளின் ஆளில்லா விமானங்கள் மூலம் தற்கொலைத் தாக்குதல்களை நடத்த முயலலாமென்ற அச்சம் ஏற்பட்டதால் புதிய ராடர் தொகுதி இவற்றைக் கண்டுபிடிப்பதற்காக கொள்வனவு செய்யவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

குறிப்பாக புதிய ராடர் தொகுதி கொழும்பில் பொருத்தப்பட்டு கொழும்பையும் அதனைச் சூழவுள்ள பகுதிகளையும் சேர்ந்த வான்பரப்பு, முழுநேரமும் அவதானிக்கப்படும். அத்துடன் இலங்கையின் வான்பரப்புக்குள் ஏற்படும் அனைத்து அச்சுறுத்தல்களையும் முறியடிக்க விமானப்படை தயாராகவுள்ளது.

இதே நேரம் கடந்த காலங்களில் விமானப்படையினர் இழந்த வான் கலங்களுக்குப் பதிலாக புதிய வான்கலங்களைக் கொள்வனவு செய்யவேண்டியுள்ளது.

எனவே இது மீண்டும் ஒரு யுத்ததிற்கான ஏற்பாடு அல்ல. இல்லாதவற்றையும் சீர் செய்யும் நடவடிக்கையே இதுவாகும். இது தொடர்பாக மக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை. விடுதலைப் புலிகளின் பகுதிக்குள் விமானப்பறப்பு தொடர்பாக எயார் மார்ஷல் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், வடக்குக் கிழக்கில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் இனிமேல் விமானப் படை உலங்கு வானூர்திகள் செல்வது தொடர்பாக ஜனாதிபதியே தீர்மானம் எடுப்பார் என தெரிவித்தார்.

(க-04)

# மட்டு. களுவன் கேணியில் இளைஞர் சுட்டுக் கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு களுவன்கேணியில் நேற்று முன்தினம் இளைஞரொருவர் இனந்தெரியாத ஆயுதபாணிகளினால் அவரது வீட்டில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

இவர் சிவகுரு தியாகராஜா (வயது 24) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இரவு உணவை எடுதத பின்பு வீட்டிலுள்ளவர்களுடன் உரையாடிக்கொண்டிருந்த சமயம் அங்குவந்த இரண்டு நபர்கள் வெளியே நின்று பெயர் கூறி அழைத்ததாகவும்,

அந்நேரம் அவர் வெளியே சென்ற சமயம் துப்பாக்கிதாரிகள் அவர்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டு சென்றுள்ளதாகவும் கூறப்படுகிறது. (க-4)

## ஆன்மீகச் சொற்பொழிவு

பருத்தித்துறை ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெற்றுவரும் ஆன்மீக சொற்பொழிவு தொடரில் இன்று காலை 10 மணிக்கு "நலம் தரும் நம்பிக்கை" என்னும் பொருள் பற்றி சைவப் புலவர் நவரட்ணம் ஆன்மீகச் சொற்பொழிவு ஆற்றவுள்ளார். (க-35)

# மட்டு - அம்பாறையில் தொடர்மழை இயல்பு வாழ்க்கை பெரும் பாதிப்பு!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களில் நேற்று முன்தினம் காலை முதல் தொடர்ச்சியாக பெய்து வரும் அடைமழைகாரணமாக மேலும் பல கிராம மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

ஏறாவூர் பற்று பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட களுவன் கேணி, ஒருமுனைச்சோலை, ரமேஸ்புரம் ஆகிய மூன்று கிராம மக்களின் குடியிருப்புக்களுக்குள் வெள்ளம் புகுந்துள்ளதால் அவர்கள் தமது இருப்பிடங்களை விட்டு இடம்பெயர்ந்து பாடசாலைக் கட்டடங்கள், பொதுக் கட்டடங்களில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

இதேவேளை வெல்லாவெளி பிரதேசத்திலும் வெள்ளம் நிரம்பியுள்ளதால் மூன்று பிரதேசங்களுக்கான போக்குவரத்துக்கள் முற்றாகத் துண்டிக்கப்பட்டுள்ளன.

வேற்றுச்சேனை, பாலையடிவெட்டை, ஆலையடிவெட்டை போன்ற பிரதேசங்களுக்கான போக்குவரத்துக்களும் துண்டிக்கப்பட்டுள்ளன. வாகரை பிரதேசத்திலும் வெள்ளம் பாய்வதால் மக்கள் மிகுந்த நெருக்கடிகளை எதிர்நோக்கியுள்ளதுடன் இருவர் பாம்பு கடித்து மரணித்துள்ளனர்.

இவர்களின் சடலங்கள் வாழைச்சேனை வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருந்தன. வாழைச்சேனை கிண்ணையடியில் மின்சார வயர் ஒன்று அறுந்து விழுந்ததன் காரணமாக வயோதிபர் ஒருவர் மின்சாரம் தாக்கி மரணமானார். காத்தமுத்து செல்லத்தம்பி என்பவரே இவ்வாறு மரணமானவராவார்.

அமபாறை மாவட்டத்தில் கடந்த வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணி முதல் இரவு 10 மணி வரை மீண்டும் பெய்த கடும்மழை காரணமாக மாவட்டத்தில் வெள்ள நீர் மடடத்தின் அளவு உயாவடைந்துள்ளதுடன் சுமாா 75 ஆயிரம் குடும்பங்கள் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளாாகள்.

இதேவேளை வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு இன்னமும் நிவாரணம் வழங்கப்படவில்லை என்றும் புகார் தெரிவிக்கப்படுகிறது.

நிந்தவூா, கல்முனை, சாய்ந்தமருது, நாவிதன் வெளி, காரைதீவு, அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று, ஆலையடி வேம்பு, திருக்கோயில், பொத்துவில் ஆகிய பிரதேச செயலகப் பிாிவுகளில் சுமார் 50 வீதமான நிலப்பரப்பு நீரில் மூழ்கியுள்ளன. இப் பிரதேசங்களின் தாழ்ந்த பகுதிகளில் சுமாா நாலரை அடி அளவில் நீர் மட்டம் காணப்படுகிறது. வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட நிலையில் இருப்பிடங்களை விட்டு வெளியேறி மேட்டு நிலங்களிலுள்ள பாடசாலைகள், கோயில்கள் என்பவற்றில் தங்கியுள்ளவாகளுக்கு சொந்தக்காரர்களின் வீடுகளில் தங்கியுள்ளவாகளுக்கும் இதுவரைககும் எந்தவொரு நிவாரணமும் வழங்கப்படவில்லை.

இதனையிட்டு பாதிக்கப்பட்டுள்ளவர்கள் தங்களின் விசனத்தை தெரிவிக்கின்றாாகள்.

அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பகுதியிலுள்ள சுமார் 90 சதவீதமான வயற்காணிகள் நீரில் முற்றாக மூழ்கியுள்ளன.

இதனால் விவசாயிகள் மிகுந்த கவலையடைந்துள்ளாாகள். தற்போதைய சீரற்ற கால நிலையைப் பயனபடுத்தி வியாபாாிகள் உணவுப் பொருட்களின் விலையை உயர்த்தியுள்ளார்கள். அத்தோடு சில பொருட்களுக்கு செயற்கை தட்டுப்பாட்டையும் ஏற்படுத்தியுள்ளார்கள.

குறிப்பாக கோதுமை மாவிற்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. சில வியாபாாிகள் கோதுமை மாவை பதுக்கி வைத்து கூடிய விலைக்கு விற்று வருகின்றார்கள். ஒரு கிலோ கோதுமை மா 30 ரூபா முதல் 35 ரூபா வரை விற்கப்படுகிறது.

இதேவேளை, அம்பாறை மாவட்டத்தில் ஏற்பட்ட சீரற்ற கால நிலை மற்றும் வெள்ளப் பெருக்கு காரணமாக 16 ஆயிரத்து 150 மீனவா குடும்பங்கள் பாதிககப்பட்டுள்ளதாக அம்பாறை மாவட்ட கடற்றொழில் வளதிணைக்களம் தெரிவிக்கின்றது.

இதேவேளை வெள்ள நிலைமையை சமாளிக்கும் பொருட்டு அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் எச்.எம்.ஹேரத் அபேதீர கடந்த வியாழன் பிற்பகல் அவசர மாநாடொன்றை அம்பாறை கச்சேரியில் கூட்டினாா.சகல பிரதேச செயலாளாகளும் திணைக்களத் தலைவர்களும் அவ் அவசர மாநாட்டில் 3 மணிநேரமாக கலந்துரையாடினர்.பிரதேச செயலக ரீதியாக பாதிக்கப்பட்ட, வீடு இழந்த, இடம்யெர்ந்த, அதிகம் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் விபரங்கள் பெறப்பட்டன.மொத்தமாக 73 ஆயிரத்து 137 குடும்பங்கள் அம்பாறை மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அவற்றில் 9ஆயிரத்து 930 குடும்பங்கள் கடும் பாதிப்புககுள்ளானதாகத் தொிவிக்கபபட்டது.

பாதிக்கப்பட்ட அனைவருக்கும் 07 நாள் உலருணவு வழங்கப்பட வேண்டுமென்று சகல பிரதேச செயலாளாகளும் வேண்டுகோள் விடுத்தனர். பாதிக்கப்பட்ட மக்களை விட முதலில் இடம பெயாந்த மக்களுக்கு மட்டுமே முன்னுாிமை வழங்குமாறு அரச அதிபர் கேட்டுக் கொண்டார்.ஒரு சில பிரதேச செயலாளாகள் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் புள்ளி விபரத்தை கூடுதலாக வழங்கியமையும் நேரடியாகச் சென்று பார்த்ததில் தெரிய வந்தமையை அவர் அங்கு சுட்டிக் கட்டினார். இந்நிலை உண்மையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் சென்றடைவதில் தாமதத்தை ஏற்படுத்துமென அரச அதிபர் கூறினார்.

இதேவேளை அமைச்சா போியல் அஷ்ரப்பின் ஏற்பாட்டில் 1 கோடியே 70 இலட்சம் ரூபா வெள்ள நிவாரணத்திற்காக வழங்கப்படும் என்று கூறப்பட்ட போதிலும் நேற்று முன்தினம் வரை ஆக 30 இலட்சம மட்டுமே கிடைக்கப் பெற்றுள்ளதாக சமூக சேவைத் திணைக்கள வட்டாரங்கள் தொிவித்தன.

(க-4)

## தென்னிலங்கையில் தொற்றுநோய்

மாத்தறை, எம்பிலிப்பிட்டிய உட்பட தெற்கின் பல பகுதிகளிலும் கிராமங்களிலும் ஒரு கொடிய தொற்றுக் கிருமி பரவும் நிலை உருவாகியுள்ளதாகவும், ஏற்கனவே 6 பொது மக்கள் இந் நோயினால் மரணமடைந்துள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஏராளமான பாதிப்படைந்த நோயாளிகள் தொற்றுநோயாளர் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்படுவதாகவும் இந் நோய் பரவுவதற்கான காரணமோ, கிருமி உருவானதற்கான காரணமோ இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லையென்றும் தெரிவிக்கப்படுகிறது.

இத் தொற்றுநோயினால் பாதிப்புற்ற நோயாளர் சிலரின் இரத்தம் பரிசோதனைக்காக அனுபபப்பட்டுள்ளதாகவும், முடிவுகள் வெளிவந்தவுடன் இது குறித்து நடவடிக்கை எடுக்கவுளளதாகவும் தொற்றுநோயாளர் வைத்தியப் பிரிவின் பொறுப்பாளர் ஒருவர் கருத்துக் கூறியுள்ளார். (க)

## மா விநியோகம்

தற்போது குடாநாட்டில் மாவுககு ஏற்பட்டிருக்கும் தட்டுப்பாட்டினைக் கருத்தில் கொண்டு புங்குடுதீவு, நயினாதீவு ப.நோ.கூ.சங்கத்தினர் புங்குடுதீவு, நயினாதீவு பிரதேசங்களைச் சேர்ந்த மக்களுக்கு பங்கீட்டு அடிபபடையில் 1 கிலோ 26 ரூபா விலையில் கிளை நிலையங்கள் ஊடாக மா விநியோகம் செய்து வருகின்றனர்.

இதன் போது 1தொடக்கம் 4 வரையான அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பங்களுக்கு 3 கிலோ கிராம் மாவும் 5க்கு மேற்பட்ட அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பங்களுக்கு 5 கிலோ கிராம் மாவும் வழங்கப்பட்டு வருகின்றது. (ப-126)

## பட்டினிக்கு எதிரான அமைப்பினால் உதவி

புங்குடுதீவு 2,9ஆம் வட்டாரங்களில் வசிக்கும் துவிச்சக்கர வண்டிகளின உதவியுடன் தொழில் செய்வோருக்கு துவிச்சக்கரவண்டி உபகரணங்களும், சிற்றுண்டி வகைகள், உணவுப் பொதிகள் போன்றவற்றை விநியோகிப்பவர்களுக்கு சமையல் உபகரணங்களும் கூலிவேலை செய்வோருக்கு கூலித்தொழில் உபகரணங்களும் விதவைகளுக்கு சமையலறை சாமான்களும் பட்டினிக்கு எதிரான நிறுவனத்தினால் வழங்கப்பட்டுள்ளன. (ப-126,9)

## பாராளுமன்ற பதவி வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

இலஙகை பாராளுமன்றத்தில் ஏற்பட்டுள்ள பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்குத் தகுதியானோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

முறைமைகள் பொறியியலாளர், வலை மனைப்பதிப்பாசிரி (ஆங்கிலம்/சிங்களம்), வலை மனைப் பதிப்பாசிரியர் (ஆங்கிலம்/தமிழ்), பாராளுமன்ற உரைபெயர்ப்பாளர்கள் (சிங்களம்/ஆங்கிலம்/சிங்களம்), (ஆங்கிலம்/தமிழ்/ஆங்கிலம்), (சிங்களம்/தமிழ்/சிங்களம்), தமிழ் சுருக்கெழுத்தாளர்கள், தொழில்நுட்ப உத்தியோகஸ்தர்கள், வளிச்சீராக்கல், குளிரூட்டல் தொழில்நுட்பவியலாளாகள் மற்றும் உதவிக் களஞ்சியப் பொறுப்பாளர் ஆகிய பதவிகளுக்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பொருத்தமான இலங்கைப் பிரஜைகளிடம் இருந்து இதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இதற்கான விண்ணப்பப்படிவங்கள் எதிர்வரும் ஜனவரி மாதம் 18 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத் தபாலில் 'பாராளுமன்றச் செயலாளர் நாயகம், இலங்கை பாராளுமன்றம், ஸ்ரீஜயவர்த்தனபுர, கோட்டே' எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்களை டிசம்பர் 17 ஆம் திகதி வெளியான வர்த்தமானியில் பார்வையிடலாம். (ற-5)

## ஆலய புனரமைப்புப் பணிக்காக அமைச்சர் டக்ளஸ் நிதியுதவி

(யாழ்ப்பாணம்)

நல்லூர் ஸ்ரீ கைலாசபிள்ளையார் கோவிலின் புனரமைப்பு நடவடிக்கைகளுக்கென கமத்தொழில் சார்ந்த விற்பனை அபிவிருத்தி, கூட்டுறவு அபிவிருத்தி, இந்து சமய அலுவல்கள் மற்றும் கல்வி, வாழ்க்கைத் தொழிற் பயிற்சிககு உதவும் அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா ஐந்து இலட்சம் ரூபா நிதியை அண்மையில் வழங்கியுள்ளார்.

இலங்கை முழுவதில் அமையப் பெற்றிருக்கும் இந்துமத வழிபாட்டுத் தலங்களின் அடிப்படை வசதிகள் முதல் நிலவி வரும் அனைத்து விதமான குறைபாடுகளையும் முழுமையாகப் பூர்த்தி செய்து கொடுக்கும் பாாிய முயற்சியில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஈடுபட்டுள்ளார்.

அந்தவகையில், இரத்மலானை கற்பகப் பிள்ளையார் ஆலயத்திற்கு ஐந்து இலட்சம் ரூபாவினையும் அண்மையில் வழங்கியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மேற்படி ஆலயங்களின் புனரமைபபு நடவடிக்கைகளுக்காக 10 இலட்சம் ரூபாவை வழங்கியதுடன், கொழும்பு இரத்மலானை இந்துக் கல்லூரியின் கலை விழாவுக்கென 50 ஆயிரம் ரூபாவையும் கல்லூரி அதிபரிடம் வழங்கியுள்ளார்.

மேறபடி நிதியொதுக்கீடுகளை வழங்கும் வைபவம் அண்மையில் அமைச்சரின் வாசஸ்தலத்தில் இடம்பெற்றது. இதில் அமைச்சரின் இந்துமத விவகாரங்களுக்கான ஆலோசகர் சட்டத்தரணி மகேஸ்வரி வேலாயுதம், இந்து கலாசாரத் திணைக்களப் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசு ஆகியோர் கலந்து கொண்டனர். (ற)

## திலக் மாரப்பன மீது ஒழுக்காற்று நடவடிக்கை

(கொழும்பு)

முனனாள் பாதுகாப்பு அமைச்சரும் ஐ.தே.கட்சியின் எம்.பியுமான திலக்மாரப்பன மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு தீர்மானித்துள்ளது.

தற்போது சிறைத்தண்டனை பெற்று வரும் ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸநாயக்கவை தண்டனைக் காலம் முடிவடையும் வரை சிறையில் வைத்திருக்கவேண்டும் என்று திலக் மாரப்பன வெளியிடட கருத்துத் தொடர்பாகவே அவர் மீது ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக ஐக்கிய தேசியக் கடசியின் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நாடு திரும்பியவுடன் இவர் மீது நடவடிக்கை எடுக்க கட்சியின் செயற்குழு தீர்மானித்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-9)

## மோட்டார் சைக்கிளால் மோதி சிறுவனை காயப்படுத்திய இளம்பெண் தப்பியோட்டம்

### பெண்ணின் கனிவற்ற குணம் கண்டு பொதுமக்கள் எரிச்சல்

(யாழ்ப்பாணம்)

வீதியால் சென்று கொண்டிருந்த சிறுவன் ஒருவனை மோட்டார் சைக்கிளால் மோதிக் காயப்படுத்திய இளம்பெண் ஒருவர் இரக்கமின்றித் தப்பியோடி தலைமறைவான சம்பவம் ஒன்று அண்மையில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியில் உள்ள நாச்சிமார் கோவிலை அணடிய பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவம் பற்றித் தெரியவருவதாவது, மேற்படி பகுதியால் துவிச்சக்கரவண்டியில் பயணித்துக் கொண்டிருந்த யாழ்.பரியோவான் கல்லூரி மாணவனான ரா.காந்தரூபன் (வயது -8) என்ற சிறுவனை அதே வீதியால் மோடடார் சைக்கிளில் வந்த இளமபெண் ஒருவர் தன் மோட்டார் சைக்கிளினால் பலமாக மோதியுள்ளார். மோதுண்ட சிறுவன் துவிச்சக்கர வண்டியிலிருந்து கீழே வீழ்ந்து காயமடைந்து கதறியுள்ளான்.

இதனைக் கண்ட மேற்படி மோட்டார் சைக்கிளை ஓட்டி வந்த பெண்மணி வீழ்ந்து காயமடைந்த சிறுவனை கவனத்தில் எடுக்காது தப்பியோடித் தலை மறைவாகியுள்ளாா.

சிறுவன் ஒருவனை மோதி வீழ்த்தி விட்டோமே என்று கூட மனதில் கனிவு ஏற்படாது சம்பவ இடத்திலிருந்து தான் மட்டும் தப்பினால் போதுமென ஓட்டம் பிடித்த அப்பெண்ணின் மன நிலை கண்டு சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் கடிந்து கொண்டனர்.

இதேவேளை, இச்சம்பவத்தில் பலத்த காயங்களுக்கு உள்ளான சிறுவன் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளான். (ப)

## எஸ்.பி.விடுதலைக்கான நடவடிக்கைகள் தீவிரம்

(கொழும்பு)

சிறையில் இருக்கும் எஸ்.பி. திஸநாயக்கவை விடுவிக்கக் கோரி கொழும்பு ஹை பார்க் கோணரில் இன்று ஞாயிற்றுக் கிழமை கூட்டமொன்று நடைபெறவுள்ளது.

ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் அமைப்பு இக்கூட்டத்தை ஏற்பாடு செய்துள்ளது. அன்றைய தினம் ஜனநாயகத்தைப் பேணிப் பாதுகாக்கும் நோக்கிற்காக அனைத்து அரசியல் கட்சிகளும் இணைய வேண்டுமெனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, எஸ்.பி.திஸநாயக்கவை விடுவிக்கக்கோரி பேரணி ஒன்று நேற்று முன்தினம் வெள்ளிககிழமை நடைபெற்றது.

அதிக மக்கள் கலந்து கொண்ட இப் பேரணி அரசாங்கத்திற்குப் பாரிய சவாலாக அமையுமென பாராளுமன்ற உறுப்பினர் மனோ விஜயரட்ண தெரிவித்தார்.(ற-7)

## மீள் பார்வை

# யாழ்ப்பாணத் தமிழரசர் வரலாறும் காலமும்

வேலணை பண்டிதர் பொ.ஜெகந்நாதன்

13

### 13. செங்கடக நகர் இராச்சியம்

செங்கடக நகரைத் தலைநகர் கொண்டு ஆட்சிபுரிந்த அந் நாட்டையும், அங்ஙனம் ஆட்சி புரிந்த மன்னனையும் அத்தலைநகரையும் அதன் காலத்தையும், அவன் இராச்சிய பரிபாலனத்தையும் பேச வந்த இந்த அதிகாரத்துக்கு செங்கட நகர் என்று மகுடம் சூட்டி அந்நகரோடு தொடர்புபட்டவை அனைத்தையும் பேச எடுத்துக் கொண்டோம். மேல்வரும் இராச்சியங்களுக்கும் இவ்வாறே விளக்கம் என்க.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் முன்னொரு காலத்திருந்த இச் செங்கடகநகர் இன்றுவரை இந் நூலாலன்றி பிறரால் அறியப்படவில்லை. சொல்லவும்படவில்லை. அந்நகர் இருந்த காலம், அது இருந்த இடம், அந்நகரத்து அரசர் அந் நகரில் நிகழ்ந்த வரலாறு இவ்வளவும் அறியப்படவில்லை. இப்பொழுது யாமே ஆராய்ந்து அந்நகர் பற்றிய முழுவரலாற்றையும் விளக்குகின்றோம். வைபவமாலை, கைலாயமாலை அந்நகர் அரசர்களையும் நிகழ்ச்சிகளையும் சொல்லி இருக்கின்றன. அத் தலைநகரம் இந்த யாழ். குடாநாட்டில் எங்கே இருந்ததென்பது அது இந்த நூலின் கண்டுபிடிப்பாகப் புதிதாக வெளியாகிறது.

#### வாலசிங்கன் அரசாட்சி

வைபவமாலையில் "உக்கிர சிங்கராசன் செங்கடக நகரியை இராசதானியாக்கி அங்கிருந்து அரசாண்டு வருங்காலத்தில்" மன்மதன் போன்ற ரூபமும் சர்வராசலட்சணங்களும் உடையனாய்ச் சிங்கத்தையொத்த வல்லமையுடன் ஒரு குமாரன் பிறந்தான். அவனுக்கு நரசிங்கராசன் என்று பெயரிட்டார்கள். நரசிங்கராசன் என்ற பெயர் படைத்த வாலசிங்கனுக்கு முடிசூட்டி அரசாள வைத்து மரணமடைந்தான். வாலசிங்க மகாராசன் செயதுங்கவ்ராசசிங்கமென்னும் பட்டத்துடன் முடிசூட்டப்பெற்று அரசாட்சியை ஒப்புக் கொண்டான்." (வை.மா.பக்.23.கு.ச.பதிப்பு)

இவனைப் பற்றியும், இவன் பிறப்புப் பற்றியும், கைலாயமாலை விரிவாகச் சொல்கிறது. இவ்வாலசிங்கன் தான் செங்கடகநகர் மன்னன், உக்கிரகசிங்கன் மகன். இது கதிரைமலையில் இருந்த உக்கிரசிங்கனால் அதன் பின்னர் ஆட்சிபுரிந்த தலைநகர் "இதுநிற்க, கதிரைமலையில் இருந்த உக்கிரசிங்கராசன் சிலகாலத்தின் பின் செங்கடக நகரியை இராசதானியாக்கி அங்கிருந்து அரசாண்டு வரும் காலத்தில் (வை.ப.மா.பக்.22) என செங்கடகநகர் சொல்லியுண்மை காண்க.

செங்கடநகர் எங்குள்ளது ஏன் உக்கிரசிங்கன் மாருதப்பிரவாகவல்லியைத் திருமணம் செய்துகொண்ட பின் செங்கடநகர்க்கு மாற்றினான் என்பதை நாம் யூகித்து காண்போம். அங்ஙனம் காண முன்னர் அக்காணும் விளக்கத்தை எளிதாக்கும் பொருட்டாக இந்நகர் பற்றி எழுந்த கருத்து வேறுபாடுகளைக் கொஞ்சம் தொகுத்துத் தருவாம்.

வைபவமாலை, செங்கடநகர்க்கு உக்கிரசிங்கன் தலைநகரை மாற்றினான் என்பது பிழை. அந்நூலார் அறியாமலே சொன்னார். அவன் மாற்றிய இடம் சிங்கைநகரம் என்று பிறர்சொல்வது, இந்நூலில் அப்பிறர் சிங்கைநகர் என்று சொல்வதுதான் பிழை. அப்பிறர் தான் அறியாமல் சொன்னார். அவ் வைபவமாலைதான் சொல்வது சரியென்று சொல்லப்படுவதையும் மிக நுட்ப ஒட்பமாகக் கவனித்தல் வேண்டும்.

ஒரு சரித்திர புருசனுடைய நிகழ்ச்சி அவன் வாழ்ந்த காலம் அக்கால சந்தர்ப்பம் சூழ்நிலைக் கேற்பவே உருவாகிறது. இஃதொரு இயற்கை விதி. இதனை ஒட்டியே உக்கிரசிங்கன் சரித நிகழ்ச்சிகளையும் நாம் யூகித்தல் வேண்டும். இவ்வூகத்தை முதலில் காண்போம்.

கதிரைமலையில் வாழ்வு கொண்டிருந்த உக்கிரசிங்க மன்னன் வாழ்வுத்திட்டங்கள் திருமண நிகழ்ச்சியின் பின் கொஞ்சம் மாற்றங்கொள்ள வேண்டி வந்தனவாதல் வேண்டும். அவன் சோழப் பேரரசன் குமாரத்தியை விவாகம் செய்து கொண்டதால் அவளுக்கேற்ற பாதுகாப்பு அமைந்த அரண்மனை அமைத்தல் அவசியமாயிருந்தது. அன்றியும் தெற்கேயுள்ள சிங்களத் தாக்கங்கள் நிகழ்வல்ல கதிரைமலையில் இருந்தும் அவளைப் பாதுகாப்பதும் அவனுக்குக் கஷ்டமானதாயிருக்க வேண்டும். அவள் ஒரு அழகு சுந்தரியென்பதும் ஒரு இராசகுமாரத்தி என்பதும் அவன் நாடெங்குமன்றி பிற நாட்டகத்தும் எட்டியிருக்க வேண்டிய ஒரு செய்தியாயிருந்தது.


ஆகையால் அவன் தன் தலைநகரைச் சிங்களவர் உட்பட்ட பிறர் தாக்கங்களில் இருந்தும் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளக்கூடிய ஒரு தற்பாதுகாப்பான இடத்துக்குத் தன் தலைநகர் மாற்றியமைக்க எண்ணமிட்டான். மாருதப்பிரவாகவல்லியின் தூண்டுதலே இதற்கு முக்கிய காரணமாக இருந்தது. மாருதப்புரவாகவல்லி இந்நிலை பரத்தை தந்தைக்கறிவித்தாள். தந்தையும் அவ்யோசனையை வரவேற்றான். அவன் காவிரிப்பூம்பட்டினத்துக்கு மிக அணித்தாக இலங்கையின் வட கடற்ரையிலே அந்தலைநகரை அமைக்க வேண்டும் என்று புத்திசொன்னான். மூவரும் ஒருமனப்பட்டார்கள் இலங்கையின் வடகடற்கரையிலே காவிரிப்பூம்பட்டினத்துக்கு மிக அணிதாகவுள்ளது பருத்தித்துறைக் கடற்கரை தான். எனவே தான் காவிரிப்பூம்பட்டினத்துக்கு நேர் தெற்கே பருத்தித்துறை கடற்கரையிலே சோழன் உதவியோடு ஒரு தலைநகரமைத்தார்கள். சோழக் கப்பல்கள் சுலபமாக வரவும் போகவும் பாதுகாக்கக்கூடிய இடமாக அது இருந்தது. அத்தலைநகர் மாருதப்புரவாகவல்லியின் தூண்டுதலாலும் அவன் பாதுகாப்புக்காகவும் அது கட்டப்பட்டதாலோ அந்நகர்க்கு வல்லிபட்டணம். (பட்டணம்-புரம்-இரண்டும் ஒரு பொருளே) அதாவது வல்லிபுரம் என்று பெயரிட்டார்கள். அன்று தொடக்கம் அத்தலைநகர் இப்பகுதி வல்லிபுரம் என்று பெயர் பெறுவதாயிற்று. சோழனுடைய பாதுகாப்புப் பெறவும் அச் சோழ நாட்டோடு போக்குவரவு செய்யவும் பண்டங்கள் ஏற்றுமதி, இறக்குமதி செய்யவும் அது வாய்ப்பான தானமாயிற்று. உக்கிரசிங்கனும் மனைவியும் எவ்வகையான அச்சமுமின்றி இலங்கையின் வட பகுதியை அரசு புரிய அது வாய்ப்பானதாயிற்று. சோழர் தலைநகரான காவிரிப்பூம்பட்டினத்திற்கு நேரே தெற்கே பருத்தித்துறைக் கரையில் இருந்தது தான் இச் செங்கடகநகரம் என்க.

அது கடல் அருகுப்பட்டணமாக இருந்தது. சோழநாட்டுக் கப்பல்கள் மூலம் படைகள் எளிதாக வரக்கூய பாதுகாக்கக்கூடிய இடமாக இருந்தது. பிற மரக்கலங்கள் தங்கள் வியாபாரம் நோக்கமாகவும் அங்கேவந்து தங்குவன ஆயின. அந்நகர் தோன்றி அப்பெயரும் தோன்றி தொழாயிரம் 900 ஆண்டுவரை பின்னால் வைபவமாலை எழுதப்பட்டது. அதிலே கடகநகர் "செங்" என்னும் அடைபெற்றுச் செங்கடநகர் என்று குறிக்கப்படலாயிற்று.


இன்னும் ஊகிக்கிடப்பது வல்லியைச் சோழமன்னன் தீர்த்தமாடிச் சிவாலய தரிசனம் செய்து குன்ம வியாதியும் தீர்ந்து குதிரை முகமும் மாறித் தம்மிடம் வந்தால் தன்குலச் சோழமன்னனுக்குத் திருமணம் செய்து வைக்கலாம் என்று எண்ணிக் கீரிமலைக்குத் தீர்த்தமாடச் சிவாலய தரிசனம் செய்யவிட்டிருக்க வேண்டும். அவன் அங்கே போய் நோய் நீங்கப்பெற்று யௌவன சொருபியானதும் தற்செயலாக அவளைச் சந்திக்க நேர்ந்த உக்கிரசிங்கன் அவளைக்கண்டு மயங்கிய காதலால் காவல் கடந்தவனைக் கைப்பிடித்துவிட்டான். இதனை அறிந்த ஏவலாளர்கள் சோழராசக்கறிவித்தும் அவனுள்ளம் தூக்கிவாரிப் போடப்பட்டிருக்க வேண்டும். ஒருவன் கைப்பிடித்த வல்லியைத் திரும்பக் கொண்டுவந்து தன்னாட்டில் மணம் முடிப்பதும் இயலாது. வல்லியும் விரும்பி வாராள் உக்கிரசிங்கன் மகளைக் கவர்ந்துவிடானோ என்று கோபித்துப் போர் பொருதவும் இயலாது. மகளின் வாழ்க்கை கெட்டுவிடும். தீர்த்தமாடப் போன பெண் உக்கிரசிங்கனைத் தானாக வரித்தவளுமல்லன், அவனாசைக் கிணங்காமல் எதிர் நின்று போராட அவளாலும் அங்கே இயலாது. எனவே அவன் மேலும் குற்றமில்லை என்ற அளவிலே ஏவலாளர் இத் திருமணச் செய்தியைச் சொல்லக் கேட்டும் சோழன் ஒன்றும் பேசாதிருந்துவிட்டான் என்று வைபமாலை சொல்லுகிறது. வல்லிகந்த சுவாமி கோயிலைக் கட்டவேண்டும் என்று திருமுகமனுப்பினதும் பிள்ளைப்பாச வசப்பட்டு அக் கோயில் கட்டவேண்டிய எல்லாவுதவிகளையும் செய்தவன்.

(தொடரும)





யாழ்.திறந்த பல்கலைக்கழகத்தில் பட்டமேற்படிப்பு டிப்ளோமா அறிமுகவிழா நேற்று நடைபெற்ற போது யாழ்.திறந்த பல்கலைக் கழகத்தின் பிராந்திய இணைப்பாளர் ச.ஆ.ஞானேந்திரன் மாணவர்களை வரவேற்று உரைநிகழ்த்துவதையும், யாழ்.பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ், யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கி.சிவநேசன், பேராசிரியர் சபாஜெயராசா, கலாநிதி தணியாசகம்பிள்ளை, விரிவுரையாளர் திருமதி வில்வரெத்தினம் ஆகியோர் மேடையில் அமர்ந்திருப்பதையும், பயிற்சிக்காக வந்திருந்த மாணவர்கள் ஒரு தொகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்:- சிவசங்கர்)







திரிகோனே கலை மையத்தன் அனுசரணையுடன் சினெயாத்ரா-2 தொடரில் யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச்சங்க கேட்போர் கூடத்தில் இன்று காலை 10.00மணிக்கும், பி.ப.3.00மணிக்கும் இலவசமாகக் காண்பிக்கப்படவுள்ள சர்வதேச விருதுபெற்ற பவுறு வளளு (சுவர்களுக்குள்) அக்னி தாஹய(அக்கினித் தாகம்) ஆகிய சிங்களத் திரைப்படத்தில் இடம்பெறும் சில காட்சிகள்.

# மற்றோரை உயர்நிலைப் படுத்தினால் எமது வாழ்வு மகிழ்ச்சியாக அமையும்

இறைவன் காலத்துக்குக் காலம் மக்களை நல்வழிப்படுத்த



அம்மக்களின் தவறான பாதைகளைச் செம்மையாக்கத் தூதர்களையும், இறைவாக்கினர்களையும், நீதியாளர்களையும் அனுப்புகின்றார். இறுதியில் தாமே அவதாரங்களை எடுத்துத் தீமையில் இருந்து மக்களைப் பாதுகாக்கின்றார் என்று சமயங்கள் எல்லாம் எடுத்துக் கூறுகின்றன.

பாவம் பெருகிய உலகில் மனிதனை மீட்க இறைவன் மனித அவதாரம் எடுக்கவேண்டிய நிலை ஏற்படடது. விண்ணையும் மண்ணையும் படைத்த இறைவன் மனிதனாகப் பெண்ணிடம பிறந்தவராக இவ்வுலகிற்கு வரசித்தமானார். இவ்வாறே இயேசுவின் பிறப்பும் சாத்தியமானது.

### நன்றியுள்ளவர்களாக வாழுங்கள்

ஒவ்வொரு மனிதனும் இவ்வுலகில் பிறந்தது இறைவனின் திருவுலமே. ஒவ்வொரு மனிதனும் இறைவனின் சாயலே. மற்றைய படைப்புக்களுக்கு இல்லாத சிறப்பு மனிதனுக்கு மாத்திரம் இருககக் காரணம் அவன் இறைவனின் சாயலாகப் படைக்கப் பட்டமையேயாகும்.

எனவே, மனிதன் இறைவன் மட்டில் நன்றியுள்ளவனாக இருககக் கடமைப்பட்டுள்ளான். புனித பவுல் கூறுகின்றார் "என்ன நேர்நதாலும் இறைவனுக்கு நன்றி

## பரமபிதா காட்டிய பாதை

கூறுங்கள்" என்று.

மனிதன் படைப்பைப் பாதுகாத்து விருத்தி செய்யவேண்டும் என்பது இறைவனின் விருப்பமாகும். மனிதன் படைப்பை விருத்தி செய்கின்றான், புதியன உருவாக்குகின்றான், அவற்றினால் பயனடைகின்றான் ஆனால் நன்மைககான பலவற்றைத் தீமைக்குப் பயன்படுத்தும் போது இறைவனுக்கு எதிராகவே செயற்படுகின்றான. இதனாலே உலகிலே வன்முறைகளும், போர்களும் தொடர்கின்றன.

### மற்றவர்களை உயர்வாக எண்ணவேண்டும்

மனிதன் சிரித்துப் பேசி பகிர்ந்து வாழ்ந்து மகிழவேண்டியவன். வாழ்வுக்கு அர்த்தம் கொடுக்க வேணடியவன் பல வேளைகளில தன் பெருமையை மற்றவர் பாராட்ட வேணடுமென்ற மனப்பான்மையில வாழ்வதினாலே அடுத்தவரை அவனால் ஏற்றுக்கொள்ள முடிவதில்லை. தன்னை நீதிமானாகவும், மற்றவர்கள் பிழையானவர்கள், இரங்குதற்குரியவர்கள் என்ற மனப்பாங்கும் உள்ளவர்களாகச் செயறபடுவதினால் எந்தச் செயற்கரிய காரியங்களையும் முழுமையாகச் செய்ய முடியாமல் இருக்கின்றது. தாம் இருந்த நிலைகளை அவர்களால் ஏற்றுக் கொளள முடிவதில்லை. ஆனால் கடவுளுக்கு இணையாக இருக்க வேண்டியவர் அந்நிலையில் இருந்து இறங்கி மனிதனுக்கு ஒப்பானவராக மனிதனாகப் பிறந்தார் இயேசு.

எப்போதும் நாம் எம்மை உயர்வானவர்களாக அல்ல மற்றவர்களை உயர்வாக நினைக்கும் போது; உறவுகள் தொடரவும், நட்புகள் வளரவும், வாழ்வு வளம் பெறவும் முடியும் என்பதை இயேசு எமக்கு சொல்லித் தந்திருக்கின்றார். அவரின் பிறப்பு விழாவுக்கு எம்மை ஆயத்தம் செய்யும் நாம அவரின் பண்புகளை அணிந்து கொள்ளவேண்டும். அப்போதே அர்த்தமுள்ள கிறிஸ்மஸ் மலரும்.

### பாவிகளை அழைக்கிறார் இயேசு

இயேசு கிறிஸ்து உலகில் பிறந்ததே மாபெரும் மகிழ்ச்சிச் செய்தியாகும். ஒடுக்கப்பட்டோருக்கும், ஏழை எளியோருக்கும் இல்லிடமற்றோருக்கும், ஏதிலிகளுக்கும் விடுதலை தரும் செயதியாக அமைந்தது. இயேசு இவ்வுலகில தேடி வந்ததும் நீதிமானகளை அல்ல. பாவிகளை ஈடேற்றுத்துகக்கு அழைத்துச் செல்லவே மாடடுக்குடிலில் மார்கழிக் குளிரில், மனுமகன் மாமரியின் மடியில மண்ணுலகில் அவதரித்தார். இயேசு கிறிஸதுவின் இரண்டாம் வருகையின் நினைவாகவே முதல் முறை இயேசு பாலனாக அவதரித்த விழாவை மக்கள் கொண்டாடி மகிழ்கின்றார்கள். திருச்சபையும் மக்களின் மனமாற்றத்தை வலியுறுத்தி ஆன்மீக ரீதியில் மக்களை ஆயத்தம் செய்து பயனுள்ள வகையில் கிறிஸ்து பிறப்பு விழாவுகக்குத் தயார்ப்படுத்துகின்றது.

ஆதாம் என்ற ஒரு மனிதனாலே

**அன்ரனி பீற்றர்**

உலகில் பாவம் நுழைந்தது அப்பாவம் போக்க இயேசு என்ற ஒரு மனிதனால் உலகிற்கு மீற்பு பிறந்தது நாம் ஒவ்வொருவரும் மற்றவர்களை மீட்கின்ற உதவும கரங்களாகச் செயற்படும் போதே இயேசு கொண்டு வந்த மீட்பு பயனுள்ளதாக அமையும் அத்தகைய மன நிலையை அனைவரும் கொண்டு வாழ குழந்தையாம் இயேசுபாலன் அருள்வேண்டுவோம். ❖

## விபரங்கள் அனுப்பி வைப்பு

(புங்குடுதீவு)

வடக்கு - கிழக்கு மாகாணத்தில வெளளப்பெருக்கு, கடும் காற்றினால் பாதிக்கப்பட்ட பாடசாலைகளுக்கான உதவி வழங்கும் சர்வதேச நிறுவனங்களின் கூட்டம் திருகோணமலை மாகாண கல்வித்திணைக்களத்தில் நடைபெற்றுள்ளது.

இதில் தீவக வலயத்தில் இருந்து கடும் காற்றினால் பாதிக்கப்பட்ட பாடசாலைகளான புங்குடுதீவு மகாவித்தியாலயம், புங்குடுதீவு சுப்பிரமணியம் மகளிர் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளின் விபரம் அனுப்பிவைக்கபபட்டுள்ளதாகத் தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் வி.மகேந்திரன் தெரிவித்துள்ளார்.(ப-126,9)

## மீள் குடியமர்வு கொடுப்பனவு வழங்கப்படவில்லை

(புங்குடுதீவு)

வேலணை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதியில உள்ள கிராம சேவையாளர் பிரிவுகளான ஜே 122 தொடக்கம் ஜே 136 வரையான பகுதிகளில் ஆயிரத்து 622 குடும்பங்கள் இது வரை மீள் குடியமர்ந்துள்ள போதும இதுவரை ஆயிரத்து 120 குடும்பங்களுக்கு மீள்குடியமர்வுக் கொடுபபனவுகள் வழங்கப்பட்டுள்ளன.

மிகுதி 502 குடும்பங்களுக்கு மீள் குடியமர்வுக் கொடுப்பனவு வழங்கப்படவில்லையெனவும் வேலணைப் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் லோகநாதன் தெரிவித்துள்ளார்.(ப-126,9)



யாழ்.வல்வை மகளிர் மகாவித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா அண்மையில் இடம்பெற்ற போது வலயக் கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம் மாணவி ஒருவருக்குப் பரிசில் வழங்குவதனைப் படத்தில் காணலாம். (படம்:- கரவெட்டி செய்தியாளர்)

# மீண்டும் யுத்தத்தை ஆரம்பிக்கும் எண்ணம் அரசாங்கத்திற்கு இல்லை

## அமைச்சர் அனுரா பண்டாரநாயக்க தெரிவிப்பு

(கொழும்பு)

மீண்டும் யுத்தமொன்றினை ஆரம்பிக்கும் எந்தவிதமான நோக்கமும் ஆளும் கூட்டமைப்பு அரசாங்கத்துக்கு இல்லை என அமைசசர் அனுராபண்டார நாயக்க தெரிவித்துள்ளார்.

கேகாலை நகர சபை மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற வைபவம் ஒன்றிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கருத்துரைக்கையில்,

நாட்டினை பிளவுபடுத்தாமலும், எந்தவொரு சமூகத்தினருக்கு அநீதி இழைக்காமலும் இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதில் அரசு உறுதியாகவே இருக்கின்றது.

ஆனால் விடுதலைப்புலிகளோ இனப்பிரச்சினைத் தீர்வுக்கு நிரந்தரத்தீர்வீகாண விருப்பம் இல்லாதவர்கள் போல் காணப் படுகிறார்கள்.

இதேவேளை, மக்களுக்கு சகல விதத்திலும் அனுகூலமான வரவு-செலவுத்திட்டத்தினை எமது அரசாங்கம் சமர்ப்பித்துள்ளதினால், ஐக்கிய தேசியக் கட்சியினர் இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இதனால், அக்கட்சிக்குள் நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் மக்களிடமிருந்து அவர்கள் வேறுபடுத்தப்படவுள்ளார்கள். இது அவர்களை அழிவுப்பாதைக்கே இட்டுச்செல்லும் என அவர் மேலும் தெரிவித்தார். (04)

# சமாதான நகர்வில் தேக்கம் ஏற்பட ஜே.வி.பியே காரணம்

## அக்கியோசூடா ஐ.தே.க. எம்.பிக்கு விளக்கம்


(கொழும்பு)

ஜே.வி.பி.தமது கொள்கை விளக்கத்தை வழங்கியுள்ள போதும் தமது நிலைப்பாட்டில் எதுவித மாற்றமுமில்லை என ஜப்பானியத் தூதுவர் அக்கியோசூடா தெரிவித்துள்ளார்.

அண்மையில் ஜப்பான் மற்றும் அமெரிக்க, ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றின் தூதுவர்கள் சமாதான முயற்சிகளில் ஜே.வி.பி.காட்டிவரும் முரண்பட்ட நிலைப்பாடு தொடர்பாக ஜனாதிபதியிடம் தமது அதிருப்தியை வெளியிட்டிருந்தனர்.

அத்துடன், நோர்வேயின் சமாதான ஏற்பாட்டாளர் நிலையை ஜே.வி.பி.விமர்சித்தமை தொடர்பாகவும் அவர்கள் தமது கண்டனத்தை வெளியிட்டிருந்தனர். இதற்குப் பதிலளிக்கும் வகையில் நேற்று முன்தினம் ஜே.வி.பி. தமது நிலைப்பாட்டை தெரிவித்திருந்தது.

தமிழழ விடுதலைப்புலிகளின் இடைக்கால நிர்வாக யோசனையின் அடிப்படையில் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படுவதையே தாம் எதிர்ப்பதாக அது தெரிவித்திருந்தது. இந்த நிலையில் கருத்துத் தெரிவித்தள்ள ஜப்பானியத் தூதுவர். ஜே.வி.பியின் இந்த நிலைப்பாடே சமாதான நகர்வில் தேக்கத்தைக் கொண்டு வந்துள்ளதாகத் தெரிவித்துள்ளார். இந்தக்கருத்து ஐக்கிய தேசியககட்சியின் முக்கிய உறுப்பினர் ஒருவரிடம் தெரிவிக்கப்படடுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-4)



பொலிகையூர் சு.க.சிந்துதாசன் எழுதிய ஓரிடம் (எனும் கவிதை ) நூல் வெளியீட்டு விழா யா/நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் முதற்பிரதியை பி.கிருஷ்ணானந்தன் அவர்கள பெறுவதனைப் படத்தில் காணலாம். (படம் :- கரவெட்டி செய்தியாளர்)

# பண்டிகைக் காலத்திற்கென பொருட்கள் இறக்குமதி


(கொழும்பு)

பணடிகைக் காலத்தில் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பைத் தவிர்ப்பதற்கு அரசாங்கம் கோதுமை மா, பெரிய வெங்காயம், பருப்பு, உருளைக்கிழங்கு போன்ற 10 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்யவிருப்பதாக நுகர்வோர் விவசாய அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அடுத்த இரு மாதங்களுக்கு இப் பொருட்கள் இறக்குமதி செய்யப்படும்.

மக்கள் வங்கியூடாக இடம் பெறவுள்ள இந்த இறக்குமதிகள் அடுத்த வாரம் முதல் ஆரம்பிக்கப்படும். பெரிய வெங்காயமும், உருளைக்கிழங்கும் 100 மெற்றிக் தொண் இறக்குமதி செய்யப்படவுள்ளன. கோதுமை மா இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும்.

இதேவேளை, சதோசா நிறுவனமும் தனியார் துறைக்கு அரிசியினை வழங்கத் தீர்மானித்துள்ளது. (க-6)



'லண்டன்'
பிரசாந்த் - அங்கீதா

# ஜெயம் ரவி நடிக்கு

பாடகர் எஸ்.பி.பாலசுப்பிரமணியம் வழங்கும் கேப்பிட்ட சார்பில், சமுத்திரக்கனி இயக்கிய 'உன்னைச் சரணடைந்தேன்' பட பிரமாண்டமாகத் தயாரிக்கும் படம் 'மழை'.

தெலுங்கில் இருநூறு நாட்கள் ஓடி மாபெரும் வெற் தமிழில் மழை என்ற பெயரில் ரீமேக் செய்யப்படுகிறது. இதில் ஜெய அவரது ஜோடியாக பிரபல தெலுங்கு நடிகை ஷிரியா ந...க்கிறார். கலாபவன் மணி, சார்லி, வெங்கட் பிரபு, அம்பிகா நடி...கின்ற செய்ய, தேவிவரபிரசாத் இசை அமைக்கிறார். வைரமுத்து பாட

# நடிகரான கதை



சிறுவயதிலிருந்தே எனக்கு நடிக்க ஆசை. இருந் தாலும் பெரிய இலட்சியம் டைரக்டர் ஆவதுதான். அதனால் நடிப்பைப் பற்றிப் பெரிதாக யோசிக்க வில்லை. 'குசி' படத்தில் ஒரேயொரு காட்சியில் நடித்தேன். அதைப் பலர் பாராட்டினார்கள்.

அப்பகூட நடிகனாக எண்ணம் வரவில்லை. என்னை நடிக்கத்தூண்டியது அஜித்குமார் தான். 'நியூ' கதையை அவரிடம் சொன்னபோது இந்தக் கதையில் நீங்களே நடிக்கலாமே என்றார்.

அதுதான் எனக்கு முதல் தூண்டுதல். நாமே நடிக்கலாம் என்று யோசித்தேன். நண்பர்களிடம் இந்த யோசனையைச் சொன்னேன். எல்லோரும் உற்சாகப்படுத்தினார்கள். அதன் பிறகுதான் நடிக்... ஆரம்பி

முதல்நாள் நடிப்பை பார்த்து சிம்ரன் பாராட்டின வைச்சுக்கணும். அதுக்கு நிறைய உழைப்பேன் என்றார் என

# விவேக் அதிரடிப் பேட்டி

சிரிக்கவும் வைத்து சிந்திக்கவும் வைக்கும் காமெடி நடிகர் விவேக் ஹீரோவாக புதிய அவதாரம் எடுத் திருக்கிறார். இனித் தொடர்வது ஹீரோயிசமா? காமெடி டிராக்கா? அவரிடமே கேட்போம்.

***கேள்வி: திடீரென்று ஹீரோவானது ஏன்?***

பதில்: நான் ஹீரோவானது ஏதோ திடீரென்று நடந்த விஷயம் அல்ல. ஹீரோவாக நடிக்கச் சொல்லி சிலகால மாகவே அழைப்புக்கள் வந்துகொண்டிருந்தன. 'சொல்லியடிப்பேன்' கதைக்கு நான் பொருத்தமாக இருப்பேன் என்று தோன்றியதால் அந்த வாய்ப்பை ஏற்றுக்கொண்டேன்.

***கேள்வி: நடிப்பதைத் தாண்டி வேறு எதில் ஆர்வம்?***

பதில்: கர்நாடக இசைக்கு வெறிபிடித்த ரசிகன் நான். கல்லூரி நாட்களிலிருந்தே நான் ஹீபோர்ட் பிளேயர். பிரமாதமான குரல்வளம் இல்லாவிட்டால் கூட என்னால் பாடவும் முடியும்.



***கேள்வி: நீங்கள் நடிக்கும் படங்களில், நடக்கிற சம் பவங்களை நக்கல் செய்யும் பழக்கம் எம்.ஆர். ராதா விடமிருந்து வந்ததுதானா?***

பதில்: ஆம். எனக்கு எப்பவெல்லாம் வாய்ப்பு வருகிறதோ அப் போதெல்லாம் மக்களுக்கு நல்ல கருத்துக்களைச் சொல்லுவது என் கடமை என்று நினைத்துக்கொள்வேன். 'திருநெல்வேலி' படத்திற்கு காமெடி பாத்திரம் செய்ய என்னை அணுகியபோது முதன் முறையாக சமூக கருத்துக்களை நகைச்சுவை கலந்து சொல்லும் எண்ணம் என்னிடம் தோன்றியது.

***கேள்வி: இனி காமெடிக்கு முழுக்குத்தானா?***

பதில்: ஒரு படத்தில் ஹீரோவாக நடிப்பதால் இனி காமெடியன் வேடத்தையே ஏற்கமாட்டேன் என்பதில்லை. ஒரு ஹீரோவாக நான் கிளிக்கானால் கூட தொடர்ந்து காமெடி செய்வேன்.

***கேள்வி: ஹீரோவாக நடித்த எல்லா காமெடியன்களும் வெற்றி பெறவில்லையே?***

பதில்: நான் என்னைப்பற்றி மட்டும்தான் பேச முடியும்.

***கேள்வி: சர்ச்சைக்குரிய விஷயங்கள், கிசுகிசுக்கள் போன்றவற்றில் பெயர் அடி படும்போது மனது எப்படியிருக்கும்?***

பதில்: பொதுவாக அந்தமாதிரி விஷயங்கள் என் மனதைப் பாதிக்க நான் அனுமதிப்பது கிடை யாது. ஓர் குறிப்பிட்ட பிரிவு மீடியாக்களால் வெளியிடப்படும் இந்தமாதிரி விஷயங்கள் பிர பலமானவராக இருப்பதற்காக நீங்கள் கொடுக்கும் விலை.

***கேள்வி: 'அடப்பாவி'யை எங்கிருந்து பிடித்தீர்கள்?***

பதில்: எம்.ஆர்.ராதாவிடமிருந்து.


***கேள்வி: உங்களுக்குப் பிடித்த நகைச்சுவை நடிகர்கள் யார்?***

பதில்: சர்வதேச அளவில் பார்க்கும்போது சார்லிசப்ளின், லாரல் ஹார்டி, நார்மன் விஸ்டோன் ஆகியோர். தமிழ்ப்பட உலகத்திற்கு வரும்போது என்னைப் பொறுத்தவரை கறுப்பு வெள்ளை காலத்தில்தான் சிறந்த நகைச்சுவை வழங்கப்பட்டிருக்கிறது. நான் மிக உயர்வாக மதிக்கும் நபர்களில் எம்.ஆர் ராதா, டி.எஸ்.பாலையா, நாகேஸ் ஆகியோரும் அடங்குவர்.


# பிரசாந்துக்கு ஜோடியாக தெலுங்கு ந

தெலுங்கின் பிரபல நடிகைகளில் ஒருவர் அங்கீதா. 'லண்டன்' மூலம் அரங்கேறி இருக்கிறது.

பிரசாந்துக்கு ஜோடியாக சுந்தர்.சி.இயக்கத்தில் கிறார். கொடுத்து வச்ச மகராசி. முழுப்படமும் லண்ட ஷ்டம்னா இப்படித்தானே இருக்கணும். அங்கீதாவுக்கு



'சந்திரமுகி'
ரஜினி - பிரபு



'டான்ஸர்'
குட்டி - கனிகா

# நான் தனுஷ் ரசிகை - ஸ்ரீதேவி



எனக்கு வயசு குறைவுதான்....

வாய்ப்பு வருது என்பதற்காக நிறையப் படங்களை ஒப்புக்கொள்ளமாட் டேன். தரத்துக்குத்தான் முக்கியத்துவம் கொடுப்பேன்... நான் விஜயகுமார் மகள் என்பது எனக்குப் பலம். உடனடியாக அங் கீகாரம் கிடைக்கிறது.

அதேநேரம் விஜயகுமார், மஞ்சுளா மகளாச்சே என்று என். னிடம் நிறைய எதிர்பார்ப்பும் இருக்கும். அம்மா அப்பா இருவரும் தலா முந்நூறு படங்களில் நடித்துள்ளனர். கடினமாக உழைத்து அவர்களுக்குப் பெருமை தேடித் தருவேன்.

'தேவதையைக் கண்டேன்' படத்தில் வித்தியாசமான கரக்டரில் நடிக்கிறேன். நான் தனுஷ் ரசிகை என்கிறார் ஸ்ரீதேவி.

# ...து விஜயகாந்த் ...டி

ரோஜா கம்ை தீன், எம்.கே.ஆபிஷ தயாரித்துள்ள படம் தனுஷ் நடித்த இ திரைக்கு வருகிற

இதையடுத்

தயாரிக்கும் புதிய மான அக்ஷன் பட படத்தில் விஜயகார கிறார். அவருடைய அழகி ஒருவர் நடி ராஜ், பொன்ன மன்சூராலிகான், ராஜசேகர், டி.பி.க முமதாஜ் ஆகியே

## ...கும் 'மழை'

...பிட்டல் சினிமா என்ற பட நிறுவனம் ...ள்' படத்துக்குப் பிறகு எஸ்.பி.பிஜோயா

...வெற்றிபெற்ற 'வர்ஷம்' என்ற படமே ... ஜெயம் ரவி கதாநாயகனாக நடிக்கிறார். ...கிறார். ...க்கிய கரக்டர்களில் வடிவேலு. ...கின்றன... ராஜேஷ் யாதவ் ஒளிப்பதிவு ... பாடல்கள் எழுதுகிறார்.



...ஆரம்பிம், சன். ...ட்டினார். என் வெற்றியைத் தக்க ...ர் எஸ்.ஜே.சூர்யா.

## ...த நடிகை அங்கீதா!

...தா. அம்மணியின் தமிழ் பிரவேசம்

...தில் அங்கீதா நடித்துக்கொண்டிருக் ...ண்டனிலேயே தயாராகிறது. அதிர் ...க்கு அதிஷ்டமோ அதிஷ்டம்.



'திருப்பாச்சி'
விஜய் - த்ரிஷா

# சினிமாச் மகாநடிகன் சிதறல்

### திரை விமர்சனம்

சத்யாவுக்கு சினிமா கம்பெனியில் வேலை. கதாநாயகன் ரமேஷ்கண்ணா பற்றி தயாரிப்பாளர் டைரக் டரிடம் தாறுமாறாக சொல்லி தானே நாயகனாகிறான். நாயகி மும்தாஜை விஷம் குடிக்கவைத்து படத்தை வெற்றிப் படமாக்குகிறான்.





பொய் சொல்லி, அல்வா கொடுத்து அந்தஸ்தை உயர்த்தும் சத்யா மீது அரசியல் தலைவர் பி.வாசுவுக்கு ஈர்ப்பு. அவனைத் தனது வெற்றிக்குப் பயன்படுத்த திட்டமிட கதை அரசியலுக்குத் தாவுகிறது.

ரசிகர்கள் சத்தியாவை முதல் அமைச்சராக வர வற்புறுத்த ஆளும்கட்சி எம். எல். ஏக்களை வளைக்கிறான். சத்தியாவைக் கொல்ல தலைவர் திட்டமிட அவரைச் சிறையில் தள்ளி ஆட்சியைப் பிடிக்கிறான்.

பழைய மந்திரிகளுக்கு பதவி தருவதாக ஆசைகாட்டி அவர்களது சொத்துக்களைப் பறிக்கிறான். முதல்மந்திரி பதவி எட்டும் தூரத்தில்... பதவியை சத்யா ஏற்றானா என்பது கிளைமாக்ஸ்.

சத்யாவாக சத்யராஜ், வழக்கமான கிண்டலை இதிலும் வெளுத்துள்ளார். சினிமா, அரசியல் இரண்டையும் ஒரு பிடி பிடிக்கிறார்.



ரமேஷ்கண்ணாவிடம் இருந்து கதாநாயகன் வாய்ப்பைப் பிடுங்குவது வயிறு குலுங்கும் சிரிப்பு. முன்னணி நடிகர்கள் சாயலில் நடித்து வசனம் பேசுவது அமர்க்களம்.

அரசியலில் நுழைந்ததும் கதை சீரியஸ். கிளியை வைத்து முதல்வர் தேர்வு நடத்துவது தமாஷ்...

சத்யராஜின் ரசிகராக வரும் மனோஜ் பாத்திரம் யதார்த்தம். கைபோன நிலையிலும் தீக்குள் நுழைந்து குழந்தையைக் காப்பாற்றுவது உருக்கம்.

மனோஜ் - மல்லிகா ஜோடி வாழ்க்கை கதை ஜீவன்.

ரமேஷ்கண்ணா சிரிக்க வைக்கிறார். கதாநாயகன் வாய்ப்பு போய் தாடியுடன் சைக்கிளில் தான் நடித்த பழைய இடங்களைப் பார்த்தபடி வேகமாய்ச் செல்ல பின்னணியில் 'ஞாபகம் வருதே...' பாடல் ஒலிப்பது உச்சக்கட்ட சிரிப்பு.

நமீதா - மும்தாஜ் கவர்ச்சி விருந்து படைக்கிறார்கள்.

டி.பி.கஜேந்திரன், ராஜ்கபூர், மனோபாலா, விக்ரமன், கே.எஸ்.ரவிக்குமார், எஸ்.ஜே.சூர்யா, மணிவண்ணன் என டைரக்டர்கள் பலர் நடித்துள்ளனர். விசுவும் சிறிதுநேரம் கலக்குகிறார். தேவாவின் இசை படத்துக்கு மெருகூட்டுகிறது.

யதார்த்தமான சினிமா அரசியல் நிகழ்வுகளை காமெடித் தனத்துடன் சொல்லி சிரிக்கவும் சிந்திக்கவும் வைத்துள்ளார் இயக்குனர் ஷக்தி சிதம்பரம்.

*மகாநடிகன் - மகா காமெடியன்.*



# மொட்டை தலையுடன் நடிக்கும் கதாநாயகி

வேல்ட் வைற் பிலிம் நிறுவனம் 'அதிசய மணல் மாதா' என்ற படத்தைத் தயாரிக்கிறது. இதில் கதாநாயகனாக அமர்ஜித் என்பவர் அறிமுகமாகிறார்.

கதாநாயகியாக பிரியங்கா சைலு நடிக்கிறார். இவர் முன்பு 'சேட்டை', 'காதலானதே' ஆகிய படங்களில் நடித்துள்ளார். 'அதிசய மணல் மாதா' படம் இவருக்கு 3ஆவது படமாகும்.

தூத்துக்குடி மாவட்டம் பெரியதாழைப் பகுதியில் நடந்த உண்மை சம்பவம் தான் இப்படத்தின் கதை. இப்படத்துக்காக கதாநாயகி பிரியங்கா சைலு மொட்டையடித்து நடிக்கிறார்.

கரக்டருக்காக சரத்குமார், சரண்ராஜ், விக்னேஷ் போன்றவர்கள் மொட்டை அடித்தது உண்டு.

தற்போது கதாநாயகி நிஜமாக மொட்டை அடிப்பது இதுதான் முதல் முறை என்கிறார்கள் படக்குழுவினர்.

படத்தில் கதாநாயகிக்கு மொட்டை அடித்து கரும்புள்ளி செம்புள்ளி குத்தி தண்டனை வழங்குவது போன்று காட்சி வருகிறதாம். அதற்காகத்தான் இந்த ஏற்பாடு.

### மீண்டும்....மீண்டும்....

தமிழில் ஸ்ரீகாந்த் ஜோடியாக தொடர்ந்து 4 படங்களில் நடித்தார் சினேகா. தற்போது மீண்டும் [illegible]னடப் படம் ஒன்றில் ஸ்ரீகா[illegible]டன் ஜோடி சேருகிறார் [illegible].




சச்சின்
விஜய்- ஜெனிலா டிசவுசா

## ...த் நடிக்கும் 'பேரரசு'

...கம்பைன்ஸ் சார்பில் காஜாமை... ஆயிஷா ஆகிய இருவரும் சேர்ந்து ...படம் 'தேவதையைக் கண்டேன்'. ...த இந்தப் படம் பொங்கலன்று ...ருகிறது.

...படுத்து அவர்கள் இரண்டு பேரும் ...புதிய படம் 'பேரரசு' பிரமாண்ட...ன் படமாக உருவாகும் இந்தப் ...யகாந்த் கதாநாயகனாக நடிக் ...டைய ஜோடியாக மும்பை இளம் ...ர் நடிக்கிறார். மற்றும் பிரகாஷ் ...ன்னம்பலம், ரமேஷ் கண்ணா, ...ன், எம்.எஸ்.பாஸ்கர், வக்கீல் ...பி.கஜேந்திரன், மகாநதி சங்கர் ...கியோரும் நடிக்கின்றனர்.

# தத்துவ மழை பொழியும அஜீத்



அனுபவங்கள் கொடுத்த பாடமோ என்னவோ தெரியவில்லை. தற்போது அஜீத் பேச ஆரம்பித்தாலே தத்துவ மழை பொழிகிறார்.

'வாழ்க்கையில் நிரந்தர நண்பர்கள், நிரந்தர எதிரிகள் என்று யாரும் கிடையாது. சந்தர்ப்பமும் சூழ்நிலையும் தான் நாம் எடுக்கும் முடிவுகளை ஆளுமை செய்கிறது' என்று லேட்டஸ்டாக ஒரு தத்துவத்தை உதிர்த்திருக்கிறார்.

# செய்தித் துளிகள்

## சிறுவர் நாடக விழா

(துன்னாலை)

வடக்கு-கிழக்கு மாகாணக் கல வித்திணைக்களத்தினால் நடாத் தப்படும் யாழ் மாவட்ட சிறுவர் நாடக விழா உடுப்பிட்டி மகளிர் கல்லூரி யில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு இடம்பெறவுள ளது. இந் நிகழ்வில் விருந்தினர் களாக கரவெட்டி பிரதேச செயலர் சி.சத்தியசீலன, வடமராட்சி அரசியல் துறைப் பொறுப்பாளர் இ.தயா, யுனி செவ் உதவித்திட்டமிடல் அலுவ லர் ஆ.சிறிஸ்கந்தராஜா ஆகியோா கலந்து கொள்ளவுள்ளனர்.(க-101)

## திடீர் சோதனை

(துன்னாலை)

தமிழீழ விலைக்கட்டுப்பாட்டுப் பிரிவினர் அடங்கிய குழுவொன்று வடமராட்சி பகுதியில் திடீர் சோதனை களை நடாத்தியது.

கடைகளில் விலைக்கட்டுப் பாட்டினை மேற்பார்வை செய்வது டன் பொருட்களின் விலைப்பட்டி யல், மக்களின் பார்வைக்கு வைக்கப் பட்டுள்ளதா? என்பதையும் பாவனை முடிவுத் திகதிகள் பொறிக்கப்பட்ட பொருட்களின் காலாவதித் திகதி கள் என்பவற்றையும் கவனித்துவரு கின்றனர். (க-101)

## செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் உள்ள அரச திணைக்களங்களில் கடமையாற் றும் கணக்காளர்களிற்கான "சிகாஸ்-2005" கணனி வடிவமைப்பு சம்பந்த மான பயிற்சிச் செயலமர்வு எதிர் வரும் 29 ஆம் திகதி காலை 9.00 மணக்கு யாழ. செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இசசெயலமர்வு கடந்த 8ஆம்திகதி நடைபெறவிருந்த போதும் கொழும்பில் உள்ள திறைசேரி அதிகாரிகள் சமுகம ளிக்காததால் அது இரத்துச்செய் யப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. (ப-47)

## மாதாந்தக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் தென்மராட்சிப் பிரதேச மக்களுக் காக நடாத்தும் மாதாந்தக் கருத்தரங்கு எதிர்வரும் 19 ஆம் திகதி ஞாயிற் றுக்கிழமை பி.ப 2.30 மணிக்கு சாவகச்சேரி இராமலிங்கம் வீதியில உள்ள இராஜ அகத்தில் நடைபெற வுள்ளது.

(ரு-19)

## திடீர் சோதனை

(துன்னாலை)

தமிழீழ விலைக் கட்டுப்பாட்டுப் பிரிவினர் அடங்கிய குழுவொன்று வடமராட்சி பகுதியில் திடீர் சோத னைகளை நடாத் தியது.

கடைகளில் விலைக்கட்டுப் பாட் டினை மேற்பார்வை செய்வதுடன் பொருட்களின் விலைப்பட்டியல், மக்க ளின் பார்வைக்கு வைக்கப்பட்டுள் ளதா? என்பதையும் பாவனை முடிவுத் திகதி கள் பொறிக்கப்பட்ட பொருட களின் காலாவதித் திகதிகள் என் பவற்றையும் கவனித்துவருகின்றனர்.

(க-101)

## கலைவிழாவும் பரிசளிப்புவிழாவும்

(யாழ்பபாணம்)

தாவடி விநாயகர் முன்பள்ளியின் கலைவிழாவும், பரிசளிப்புவிழாவும் இன்று பிற்பகல் 2.00மணியளவில் தாவடி மத்திய சனசமூக நிலைய திறந்த வெளி அரங்கில் இ.பரமேஸ் வரலிங்கம் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர் களாக யாழ்.பல்கலைக்கழக சித்த வைத்தியத்துறை தலைவர் வைத் திய பொன்.இராமநாதன், யாழ். பல் கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் திருமதி கலைவாணி இராமநாதன் ஆகியோரும் சிறப்பு விருந்தினராக வலி.தெற்கு பிரதேச சபை செயலாளர் திருமதி ச.சொக்க லிங்கமும் கலந்துகொள்ளவுள்ள னர். (க-5)

## ஊனமுற்றோர் தினவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ். பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் சர்வதேச ஊனமுற் றோர் தினவிழா கடந்த வியாழக் கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு யாழ். பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் யாழ்பபாணம் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் தலை மையில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் பிரதம விருந் தினராக யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமியும், சிறப்பு விருந்தினராக யாழ்.மாவட்ட விழிப்புலனற்றோர் சங்கத்தலைவர் ஆர்.சிவகுமாரும் கலந்து கொண்டனர்.

இந் நிகழ்வில் இசை நிகழ்ச்சி கள் பலவும் நடைபெற்றன.(ரு-19)

## வருடாந்த திருவிழா

(ஊர்காவற்றுறை)

தீவகத்திலுள்ள எழுவை தீவு புனித தோமையார் ஆலய வருடாந தத் திருவிழா கடந்த 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிப 5.00 மணிக்கு அருட்தந்தை அன்ரனி ஞானப்பிர காசம் அடிகள் தலைமையில் கொடி ஏற்றத்துடன் ஆரம்பமாகியது.

தொடர்ந்து வழிபாடுகள் நடை பெற்று வருகின்றன. எதிர்வரும் 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 7.00 மணிக்கு திருநாள் திருப் பலியும், தொடர்ந்து புனித-தோமை யார் திருச்சொரூப பவனியும் இடம பெற்று திருவிழா நிறைவுபெறும். (ற)

## நற்கருணை ஆராதனை

(ஊர்காவற்றுறை)

திருத்தந்தை 2ஆம் அருளப்பர் சின்னப்பரால் பிரகடனப்படுத்தப் பட்ட நற்கருணை ஆண்டை சிறப் பான விதமாக அனுசிக்கும்பொருட்டு பிரான்சிஸ்கன் சபைத் தலைவர் நீக்கலஸ் பப்பாவின் தலைமையில யாழ-மறை மாவட்ட பிரான்சிஸ்கன சபை- மரியாயின் சேனை-அருங் கொடை மறுமலர்ச்சி மன்றம் ஆகி யன இணைந்து நடாத்தும் நற்கருணை திருமணி ஆராதனை ஒவ்வொரு செவ் வாய்க்கிழமையும் மாலை 2.30 மணியிலிருந்து 3.30 மணி வரை யாழ்-அருள் ஆச்சிரமத்தில் இடம் பெற்றுவருகின்றது. (ற)

## நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தின் "சங்கநாதம்" என்னும் நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 22 ஆம திகதி புதன்கிழமை காலை 10.30 மணிக்கு கைலாசபதி கலை யரங்கில் நடைபெறவுள்ளது.

இந நிகழ்வில் முதன்மை விருந் தினராக துணைவேந்தர் பேராசிரி யர் சு.மோகனதாஸும் சிறப்பு விருந் தினராக யாழ்மாவட்ட அரசியல்துறைப பொறுபபாளர் சி.இளம் பரிதியும் கலநது கொள்ளவுளளனா. (க7)

## இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

இதுவரை காலமும் யாழ். நாவ லர் வீதியில் இயங்கிவந்த யாழ்ப் பாணம் கால்நடை உற்பத்தி சுகா தார திணைக்களத்தின் கால்நடை வைத்தியசாலையும், உதவிப்பணிப் பாளா பணிமனையும் கடந்த 8 ஆம் திகதி முதல் இலக்கம் 280, பலாலி வீதியில் . இயங்கிவருகின்றது.

இங்கு கால்நடைகளுக்கான சிகிச்சைகளும் மற்றும் சகல செயற் பாடுகளும் மேற்கொளளப்படுகின் றன. (க-5)

## விதை தானியம் வழங்கல்

(புங்குடுதீவு)

சமுர்த்தி அதிகார சபையின் விவ சாய பிரிவின் மூலம் சமுர்த்தி சிறு குழுககளிலுள்ள விவசாயம் செய் யும் புங்குடுதீவு, நயினாதீவு ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 36 பய னாளிகளுக்கு ஆயிரம் ரூபா பெறு மதியான விதை தானியங்கள் வழங் கப்பட்டதாகவும் சமுர்த்தி முகாமை யாளர் தெரிவித்துள்ளார் (க-126)

## அடையாளஅட்டை கண்டெடுப்பு

(புங்குடுதீவு)

புங்குடுதீவு மேற்கு பெருங்காடு என்னும் விலாசம் இடப்பட்ட ஏரம்பு இராசலிங்கம் என்பவருடைய தேசிய அடையாள அட்டை யாழ்ப்பாணம் குறிகட்டுவான் வீதியில் கண் டெடுக்கப்பட்டு புங்குடுதீவு வலம் புரி பத்திரிகை விற்பனை முகவர் நிலையத்தில் (அம்பாள் களஞ்சியம்) ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் ஆதாரம் காட்டி பெற்றுக்கொள் ளவும். (க-126)

## கடனுதவி

(புங்குடுதீவு)

புங்குடுதீவு சமுர்த்தி வங்கியி னால் மீன்பிடி சுயதொழில் முயற் சிகளுக்கென ஆயிரம்ரூபா தொடக்கம் 10 ஆயிரம் ரூபா வரை மாதம் 18சத வீத வடிக்கு கடன் வழங்கப்பட்டு வருகின்றது.

இதுவரை 124 பேருக்கு மொத் தம் 7 இலட்சத்து 90 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளதாக சமுர்த்தி முகா மையாளர் தெரிவித்துள்ளார்.(க-126)

## தளபாடம் வழங்கல்

(புங்குடுதீவு)

2005 ஆம் ஆண்டு சமுர்த்தி அதிகார சபையினால் சமுர்த்தி வீட்டு விற்பனை நிலைய வீட்டு தளபாடங்கள் வழங்கல் திட்டத் தின் கீழ் 50 ஆயிரம் ரூபா பெறும தியான தளபாடங்கள் வட்டியில்லா கடன் மூலம் புங்குடுதீவு பகுதியி லுள்ள 5 பயனாளிகளுக்கு வழங் கப்படவுள்ளதாக சமுர்த்தி முகா மையாளர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், சமுர்த்தி அதிகார சபையினால் புங்குடுதீவு, நயினா தீவு சமுர்த்தி விற்பனைநிலையம் மூலம் வட்டியில்லாத கடன் மூலம் 10ஆயிரம் ரூபா பெறுமதியான வீட் டுத் தளபாடங்கள் 5 பயனாளிக ளுக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் பயனாளி மாதாந்தம் 335ரூபா வீதம் கடனை திருப்பிச் செலுத்த வேண் டும் எனவும் முகாமையாளர் தெரி வித்துள்ளார். (க-126)

## மாட்டிறைச்சிவிற்க வேலணையில் தடை

• வேலணை பிரதேசசபை நிர் வாக எல்லைக்குள் நடாத்தப்பட்டு வரும் மாட்டிறைச்சிக் கடைகளுக் கான குத்தகை இவ்வருடத்துடன் காலாவதியாகின்றது.

அத்துடன் அடுத்த வருட ஆரம் பத்திலிருந்து வேலணை பிரதேச சபை நிர்வாக எல்லைக்குள் எவ ருக்கும் மாட்டிறைச்சிக்கடை நடாத் துவதற்கான அனுமதிகள் வழங் கப்படவில்லை.

தனி நபர், பொது அமைபபுகள், மற்றும் மதஸ் தாபனங்களின் கடும் எதிர்ப்புக் காரணமாகவும் அனு மதி வழங்கப்படவில்லை. கடந்த காலங்களில் ஏற்பட்ட அசௌ கரியங்கள் காரணமாகவும், குத் தகை விடயத்தில் வருமானத்தினைப் பெறுவதில் ஏற்பட்டு இருந்த தடங் கல் காரணமாகவும், வேலணை பிரதேசசபை எல்லைக்குட்பட்ட பிர தேசங்களில் 2005 ஆம் ஆண்டின மாட்டிறைச்சிக் கடைகளுக்கான குத்தகைக்கான அனுமதி நிறுத்தப் பட்டுள்ளது.

2005 ஆம் ஆண்டிலிருந்து வேலணை பிரதேசசபை நிர்வாக எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் மாட்டிறைச்சிக் கடையினை நடாத் துதல், களவாக மாடுகளை இறைச் சிக்கு வெட்டுதல் ஆகியவை தண்ட னைக்குரிய குற்றமென வேலணை பிரதேசசபை செயலாளர் செ.சண் முகராசா தெரிவித்துள்ளார். (க-126)

## கலை விழா

சாவகச்சேரி வடக்கு மடடுவில இலஞ்சியாரணியம் ஐங்கரன் பாலர் கள் பராமரிப்பு நிலைய கலைவிழா நாளை பிற்பகல் 230 மணிக்கு நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக நகர சபை செயலாளா திருமதி குணமணி ஆறுமுகம கலந்து கொளளவுள்ளார். (ப-29)

# சிட்டகொங்-இரண்டாவது டெஸ்ட்

## இந்தியா மீண்டும் முன்னணியில்

இந்தியா-பங்களாதேஷ் அணி களிடையேயான இரண்டாவது டெஸ்ட் போட்டியிலும் இந்திய அணி பல சாதனைகளை நோக் கிச் செல்கிறது.




நேற்று முன்தினம் பங்களாதேஷ் சிட்டகொங் நகரில் ஆரம்பமான இப் போட்டியில் நாணயச் சுழற் சியில் வெற்றிபெற்ற கங்குலி, முதலில் இந்திய அணி துடுப் பெடுத்தாடும் என அறிவித்தார். ஷெவாக்கும் கௌதம் காம்பீரும் ஆட்டத்தை ஆரம்பித்தனர்.

ஷெவாக் 10 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். தொடர்ந்து காம் பீருடன் ராவிட் இணைந்து கொண் டார். இருவரும் மிகச் சிறப்பாக ஆடி ஓட்டங்களைக் குவித்தனர். காம்பீர் ஒரு ஓவரில் 4 பவுண்டரி கள்கூட அடித்தார். 60 பந்துகளில் அரைச்சதத்தை எட்டிய அவர் இப்போட்டியில் தனது முதல் சதத்தையும் பெற்றார். ராகுல் ராவிட்டும் தனது 18ஆவது சதத் தைப் பெற்றார். காம்பீர் 139 ஓட் டங்களைப்பெற்றபோது நஸ்முல் உனகனின் பந்துவீச்சில் ஆட்ட மிழந்தார்.

அவரைத் தொடர்ந்து டெண் டுல்கர் ராவிட்டுடன் இணைந்து கொண்டார். முதல்நாள் ஆட்ட முடிவில் இந்திய அணி 2 விக் கெற்றுக்களை இழந்து 334 ஓட் டங்களை எடுத்திருந்தது. டெண் டுல்கர் 36 ஓட்டங்களுடனும் ராவிட் 145 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக காதிருந்தனர்.

நேற்று இரண்டாவது நாள ஆட டம் தொடர்ந்தபோது டெண்டுல் கர் மேலதிகமாக எந்த ஓட்டத் தையும் பெறாமலேயே ஆட்டமிழந் தார். ராவிட் மிகச் சிறப்பாக ஆடி 160 ஓட்டங்களை எடுத்தார். இரு வரும் மாட்டஸாவின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தனர்.

இந்திய அணி சார்பில் கங் குலியும் சிறப்பாக ஆடி 88ஓட் டங்களைக குவித்தார். தொடர்ந்து லகஷ்மன்-9, தினேஷ் கார்த்திக்-11, இர்பான் பதன்-4, கும்ளே-23, ஹர்



பஜன்-43 ஓட்டங்களை எடுத்தனர். உதிரிகளாக 13 ஓட்டங்கள் பெறப் பட்டன.

பந்துவீச்சில் முகமட் ரபீக் 4 விக்கெற்றுக்களையும் மாற் நஸா 3 விக்கெற்றுக்களையும் நஸ்முல் உசைன் 2 விக்கெற் றுக்களையும் அஸ்ரபுல் 1 விக் கெற்றையும் வீழ்த்தினர்.

இந்திய அணி 540 ஓட்டங் களுக்கு தனது சகல விக்கெற் றுக்களையும் இழந்தது. ஆட்டம் தொடருகிறது. (து-7)

## விளையாட்டு செய்திகள்

# இங்கிலாந்து – தென்னாபிரிக்கா

## போர்ட் எலிஸபெத் டெஸ்ட்

தென்ஆபிரிக்கா- இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான முதலா வது டெஸ்ட் போட்டி எலிஸபெத் நகரில் நேற்று முன்தினம் ஆரம் பமானது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து களமிறங்கியது. ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்களாக அணித்தலைவர் ஸ்மித்தும் அறிமுகவீரர் வில்லியம்ஸூம களமிறங்கினர். ஆயினும் ஸ்மிக், தென் னாபிரிக்க வீரர் ஹோகார்ட் வீசிய இரண்டாவது பந்திலேயே ஓட்ட மெதுவும் பெறாமல் ஸ்ரெரஸிடம் பிடிகொடுத்து தனது விக்கெற்றை இழந்தார்.



தொடர்ந்து வில்லியர்ஸூடன் நுடொல்ப் இணைந்து கொண்டார். இருவரும் நிதானமாக ஆடி 63 ஓட்டங் களை அணிக்காகச் சேர்த்தனர். வில்லியர்ஸ் தன் கணக்கில் 28 ஓட்டங்களை எடுத்தவேளை பிளின் ரொப் பந்து வீச்சில் எல்.பி.டபி ள்யூ முறையில் ஆட்டமிழந்தார். நுடொல்புடன் அனுபவ வீரர் காலிங இணைந்து கொண்டார். அவர் திட்டங கள் எதுவும் பெறாமலேயே ஹார்மி ஸன் பந்து வீச்சில் நேரடியாக விக்கெற் வீழ்த்தப்பட்டு ஆட்டமி ழந்தார். அந்நிலையில் தென் னாபிரிக்க அணி 3 விக்கெற்றுக் களை மாத்திரமே இழந்து 66 ஓட்டங்களை மாத்திரமே எடுத்து இக்கட்டான நிலையில் இருந்தது.

இந் நிலையில் நுடொல்புடன் டிப்பென்னர் இணைந்து கொண் டார். இவர்கள் இருவரும் நான்கா வது விக்கெற் இணைப்பாட்டமாக 112 ஓட்டங்களைக் குவித்தனர். நுடொல்ப் 93 ஓட்டங்களை எடுத்தி



ருந்த போது பிளின்ரொப் பந்து வீச்சில் நேரடியாக விக்கெற் வீழ்த் தப்பட்டு தனது விக்கெற்றை இழந்தார்.

அவரது ஆட்டமிழப்புக்கு பின் வந்த பந்து வீச்சாளர் ஷேன் பொலக் சிறப்பாக ஆடி 31 ஓட் டங்களை எடுத்தார். அவர் ஹோகட பந்து வீச்சில் ரெஸ் ஹோதிக்கிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். அடுத்து வந்த அன்ட்று ஹோல் 6 ஓட்டங்களுடன் ஹோகர்ட் பந்து வீச்சில் நேரடியாக விக் கெற் வீழ்த்தப்பட்டு ஆட்டமிழந் தார். அவரை அடுத்து டிப்பென் னருடன சொலெகிளி இணைந்து கொணடார். முதல் நாள் ஆட்ட முடி வில் தென்னாபிரிக்க அணி 7 விக்கெற்றுக்களை இழந்து 273 ஓட்டங்களை எடுத்திருந்தது.

டிப்பன்னர் 79 ஓட்டங்களுடன் சொலேகிளி 6 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காதிருந்தனர். உதிரி களாக 24 ஓட்டங்கள் பெறப்பட் டன. பந்து வீச்சில் ஹோகார்ட், பிளின் ரொப் ஆகியோர் தலா 3 விக்கெற் றுக்களையும் ஹார்மிஸன் 1 விக் கெற்றையும் விழ்த்தினர்.

அண்மைக்காலமாக சிறப்பாக விளையாடும் இங்கிலாந்து அணி கடந்த 40 ஆண்டுகளாக தென் ஆபிரிக்காவில் தொடர் வெற்றி பெறவில்லை. இவ்வருடம் எந்தத் தோல்வியையும் சந்திக்காத இங்கி லாந்து அணி இம்முறை தொடரை வெல்லும் நோக்குடன் களமிறங் கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இன்று ஒரு தகவல்

## வால்

ஒருவர் நமது வீட்டுக்கு வருகிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள். வந்துசொல்கிறார் "சார் நான் உங்கள் வீட்டுவாசலில் நுழையும் போதே உங்கள் வீட்டு நாய் என்னைப் பார்தது வாலை ஆட்டியது" என்கிறார். இதற்கு என்ன அர்த்தம்? அவர் மிகவும் நல்ல மனதுடன் இதை நம்மிடம் சொல்கிறார் என்று அர்த்தம்.

அவரே இன்னொன்று சொல்கிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள் "நான் உங்கள் வீட்டுவாசலில் நுழையும்போதே உங்கள் கடைசிப்பையன் என்னைப் பார்த்து வாலை ஆட்டினார் சார்" என்கிறார். இதற்கு என்ன அத்தம்? அவர் மிகவும் வயிற்றெரிச்சலுடன் இதை நம்மிடம் சொல்கிறார் என்று அர்த்தம் நாய் வாலை ஆட்டினால் ஒரு அத்தம். மனிதன் வாலை ஆட்டினால் ஒரு அர்த்தம். எத்தனையோ பிராணிகளுக்கு வால் உள்ளது. அதை ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமாகப் பயன்படுத்துகிறது.

குரங்கிற்கு வால் இருபபது எதற்காக? அதற்கு வால் இன்னுமொரு கைமாதிரி குரங்கு அடிக்கடி அங்குமிங்கும் தாவிக்கொணடிருக்கிறது இல்லையா, அதுபோன்ற சமயத்தில் எதையாவது குறுக்கமாகப் பிடித்துக்கொள்ள இந்த வால் உபயோகப்படுகிறது. 'பீவர்ஸ்' என்று ஒரு பிராணிக்கு வால் தட்டையாக இருக்கும். அது தனது வாலை எப்படி உபயோகப்படுத்துகிறது தெரியுமா? அதற்கு எதிரி யாராவது வருவதைப் பார்த்துவிட்டால் போதும் உடனே தனது தோழர்களுக்கு எச்சரிக்கை கொடுக்கும். எதிரி வருகிறான். ஜாக்கிரதையாக இரு என்று எப்படித் தெரியுமா? தட்டையாக இருக்கும் தனது வாலை தரையில் தட்டும். அந்தச் சத்தத்தைக் கேட்டு மற்றவை எச்சரிக்கை அடையும்.

முதலைக்கு வால் இருப்பது எதற்காக? தண்ணீரில் நீந்துவதற்கு அது மிகவும் உபயோகப்படும். அணிலுக்கு வால் இருக்கிறது எதற்காக? அணில் மிகவும் உயரமான இடத்தில் வேகமாகத் தாவித் தாவி ஓடும். அப்படி ஓடும்போது தவறிக் கீழே விழுந்து விடாதல்லாவா? அதற்காக வாலை அப்படியும் இப்படியும் ஆட்டும். சர்க்கஸில் கம்பி மீது நடப்பவர்கள கையையும் காலையும் அப்படியும் இப்படியும் ஆட்டிச் சமப்படுத்துகிறார்கள் அல்லவா? அதுபோல!

கஙகாரு இருக்கிறதல்லவா? அது வேகமாகத் தாவித் தாவி ஓடும். அப்படி வேகமாகப் பாயும்போது நிலை தவறாமல் இருக்க வேண்டுமல்லவா? அதற்கு வால் உபயோகப்படுகிறது. அதுமட்டுமல்ல சில சமயம் அது என்ன செய்யும் தெரியுமா? தன்னுடைய பின்னங்கால் மேல் உட்கார்ந்து கொள்வதற்கு வாலைப் பயன்படுத்திக் கொள்ளும்.

முயலுக்கும் வால் இருக்கிறது. முதலில் அதைப் பார்க்கும்போது அதற்கு ஏன் வால்? அதனால் ஒன்றும் உபயோகம் இருப்பதுபோல் தெரியவில்லையே என்றுதான் தோன்றும். ஆனால் அப்படி இல்லை. முயலுக்கு உள்ள வால் அதற்கு ஒரு நல்ல பாதுகாப்புக் கேடயம் ஆமாம்! எதிரிகளிடமிருந்து தப்பிக்கொள்ள முயல் குடும்பம் வேகமாக ஓடும். அப்படி ஓடிக்கொண்டிருக்கும் போது தாய் முயல் வாலை அப்படியும் இப்படியும் அசைக்கும். அந்த அசைவைப் பார்த்து விட்டுத்தான் குட்டி முயல்கள் தாம் எந்தத் திசையில் ஓட வேண்டும் என்பதைப் புரிந்துகொள்ளும்.

மயிலுக்கு வால் உள்ளது. அதை நாம் தோகை என்கிறோம். ஆண் மயில் தோகையை விரித்தாடும் அழகே அழகு மயில் தோகை விரித்தாடுகிறது எனறு தான் சொல்வோம். மயில் வாலை ஆட்டுகிறது என்று கூறமாட்டோம். இப்படி வால் இயற்கையாக எது எதற்கு இருக்கிறதோ அவை அதை அர்த்தத்துடன் உபயோகப்படுத்துகிறது. அனுமார் கூட இலங்கேஸ்வரனுக்கு முன்னால் தனது தன்மானத்தைக் காட்ட வாலை உபயோகப்படுத்தினார்.

இருக்கின்ற வாலை இப்படி எல்லோரும் உபயோகப் படுத்தினார்கள். ஆனால் மனிதன் இல்லாத ஒன்றை இருப்பதாகக் கற்பனை செய்து கொண்டு எல்லா இடத்திலும் வாலாட்டுகிறான். என்னிடம் வாலாட்டாதே ஒட்ட நறுக்கி விடுவேன் என்ற எச்சரிக்கை வேறுதான் என்று அகந்தை தான் இதறகுக் காரணம். எங்கே போய் முடியப் போகிறதோ?

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# பேச்சுவார்த்தையா? இல்லையா? என்பதை தீர்மானிக்கும் பொறுப்பு ஜனாதிபதியிடமே உள்ளது

## சுரேஷ் பிறேமச்சந்திரன் எம்.பி.

(யாழ்ப்பாணம்)

சமாதானத்தை வேண்டி நிற்கும் எமது மக்களின் தலைவிதியை தீர்மானிக்கும் பொறுப்பு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவையே சாரும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிறேமச்சந்திரன் தெரிவித்துள்ளார். ஜனாதிபதி உடனடியாகப் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அநத அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டுத்தலைமைப் பொறுப்பைக் கொண்டுள்ள ஐரோப்பிய ஒன்றியம், அமெரிக்கா, ஜப்பான் ஆகிய நாடுகள் ஜனாதிபதியைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை தொடர்பான மெத்தனப்போக்கிற்கு விசனம் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், ஜே.வி.பி.யின் பேச்சுவார்த்தைக்கெதிரான, சமாதானத்திற்கெதிரான அவர்களது போக்கை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும்படியும் அவர்கள் ஜனாதிபதியை வலியுறுத்தியுள்ளனர்.

இலங்கையின் யதார்த்தமான பிரச்சினைகளைப் புரிந்து கொண்டதன் வெளிப்பாடே இவர்கள் ஜனாதிபதியைச் சந்தித்ததும், அதனைத் தொடர்ந்து ஓர் கூடடறிக்கையை வெளியிட்டதுமாகும். கூட்டறிக்கையானது ஜே.வி.பி.யின் நிலைப்பாட்டை பட்டவர்த்தனமாக வெளிச்சம் போட்டு காட்டி உள்ளது.

இந்நிலையில் ஜே.வி.பி.யின் செயலாளர் வெளியிட்டுள்ள பதிலறிக்கையானது, சிறுபிள்ளைத்தனமானதும், நகைப்புக்கிடமானதாகவுமே உள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகள் தாங்கள் முன்வைத்த இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை என்ற வரைவின் அடிப்படையில் பேசலாம என்றும் அந்த வரைவு தொடர்பாக அரசாங்கத்திற்கிருக்கக்கூடிய கருத்துக்களைய்ும் பேச்சுவார்த்தைக்குட்படுத்தலாம் என மீண்டும் மீண்டும் கூறிய பின்னரும், இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபைக்கான யோசனைகள் தனிநாட்டுக்கான முதலபடி எனக் கூறுவதும், அது தொடர்பாக பேசக் கூடாதென ஜனாதிபதியை வற புறுத்துவதும், ஜே.வி.பி. பேச்சுவார்த்தையை விரும்பவில்லை என்பதையே காட்டுகின்றது. ஜே.வி.பி. யினருக்கு தமிழததேசிய கூட்டமைப்பினராகிய நாம ஒரு விடயத்தை மிகத தெளிவாகக் கூறியுள்ளோம். அதாவது உள்ளக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தமிழ்த் தேசியத்தற்கு, சமஷ்டி அரசியல் அமைப்புடன் கூடிய ஓர் சுயாட்சி அரசு உருவாக்கப்பட வேண்டும்.



இது தனிநாட்டில இருந்து மிகப் பாரிய விட்டுக்கொடுப்புடன் நாம் கீழிறங்கி வந்துள்ளோம் என்பதை ஜே.வி.பி. புரியவேண்டும். ஆனால் சிங்களத் தீவிரவாதிகள் அன்று தந்தை செல்வ நாயகம் சமஷ்டி அரசியலமைப்பு முறையைக் கோரிய போதும், அது தனிநாட்டிற்கான முதற் படி என்றே கூறினார்கள்.

இன்றும சிங்களத் தீவிரவாதிகளின் தொனியில் எந்தவித மாற்றமுமில்லை. அதே பல்லவியையே பாடுகின்றார்கள்.

தமிழ் மக்களுக்கு பிரச்சினைகள் உண்டு அதனைப் பேசித்தான் தீர்க்க வேண்டும் என்பதை ஜனாதிபதி, ஐக்கிய தேசியக்கட்சி மற்றும் பல சிங்கள அமைப்புககள் ஏற்றுக்கொண் டுள்ளன. அவை உண்மையாகவே இதனை ஏற்றுக் கொண்டால், இலங்கையை ஆட்சி செய்த அரசுகளின் தொடர்ச்சியான அடக்குமுறைகளே இபபிரச்சினைகளுக்குக் காரணமென்பதையும் புரிந்துகொள்வார்கள்.

எனவே அடக்குமுறைக்குட்பட்ட ஓர் தேசிய இனம தமக்கான தீர்வை தாம் தான் முன்வைக்க வேண்டுமே தவிர, அடக்குமுறை அரசின் அல்லது அதிலும் விட தீவிர சிங்கள இனவெறியர் களின் தீர்வுகளை நாம் ஏற்கவேண்டுமென்பதல்ல.

சிங்களப் பெருந் தேசிய வாதத்தால் தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்கு அவர்களது அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய முறையில ஓர் தீர்வைத் தர முடியாதென்பதால தான் நாங்கள் தனிநாடு கோரினோம்.

இன்று இலங்கையினதும், சர்வதேச சமூகத்தினதும் கருத்தினை ஏற்று ஒன்றுபட்ட இலங்கைக்குள் தீரவொன்றைக் காண தமிழினம் தயாராக இருக்கின்றது என்பதை தமிழர் தரப்பு மிகத தெளிவாக வெளிப்படுத்தியுள்ளது.

அதன் பின்னரும் இடைக்காலத் தன்னாடசி அதிகாரசபை அடிப்படையில் பேசினால், அது தனிநாட்டிற்கு முதற் படியாகுமென ஜே.வி.பி. பேசினால் அது வெறும் குதர்க்கமான பேச்சாகவே இருக்கும்.

ஜே.வி.பியைப் பொறுத்தவரை அவர்கள் ஓர் சமஷ்டி அரசியல் அமைப்பு முறையைக் கூட ஏற்றுக்கொள்ளவில்லை என்பதே உண்மையாகும். இந்நிலையில் தாம் பேச்சுவார்த்தைக்கு கதவைத் திறந்து வைத்திருப்பதாகக் கூறுவது வெற்றுப் பேச்சேயாகும்.

அது மாத்திரமல்ல 1971ஆம் ஆண்டிலும், 1987-1990ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்திலும் எத்தனை பாடசாலை மாணவர்கள், கல்விமான்கள், உத்தியோகத்தர்கள, ஏனைய அரசியல் கட்சித் தலைவர்கள், ஏனைய அரசியல் கட்சி உறுப்பினர்கள் ஜே.வி.பி.யின் ஆயுதக்குழுக்களால் கொலை செய்யப்பட்டார்கள். 1971இல் சேகுவாராகவும், 1987-1990 இல் தேசப் பிரேமிகளாகவும் இவர்கள் செய்த கொலைகளை இவர்கள் சற்று திரும்பிப் பார்த்த பின் இவர்கள் ஜனநாயகத்தை பற்றி பேசுவது நன்றாக இருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப பும் ஜனநாயகததிற்காகவும், மனித உரிமைக்காகவும், அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்காகவுமே போராடுகின்றது. எனவே இன்றைய உடனடித் தேவை தமிழ் மக்களுக் குரித்தான தீர்வைக்காணும் முகமாக பேச்சு வார்த்தையா இல்லையா என்பதை தீர்மானிக்க வேண்டிய பொறுப்பு இன்று ஜனாதிபதியிடம் வந்துள்ளது. (க)

# இராசி பலன்

**19.12.2004**

**(மார்கழி 04, ஞாயிற்றுக்கிழமை)**

**அட்டமி பிற்பகல் 3.48 மணிவரை**

**உத்தரட்டாதி பின்னிரவு 04.06 மணிவரை**

**இராகுகாலம் 4.54- 06.24 மணிவரை**

**சுபநேரம் 9.24 - 10.54 மணிவரை**

**திருவெம்பாவை - 2 ஆம் நாள்**

- **மேடம்** – *காரிய அலைச்சல், பணவிரயம், சயன சுகக்குறைவு, தொழில்சுமை.*
- **இடபம்** – *தடைப்பட்டகாரியம் கைகூடும், போசன சுகம், நண்பர்கள் சந்திப்பு, குடும்பநலம்*
- **மிதுனம்** – *தொழில்சிந்தை, நல்ல பிரயாசை, புதிய விடயம், போசனசுகம்.*
- **கடகம்** – *புதிய தகவல், மனச்சோர்வு, எதிர் பாராத செலவு, முயற்சி தாமதம்.*
- **சிங்கம்** – *பிரயாண பயம், முயற்சி தடங்கல், பணவிரயம், அமைதிக்குறைவு.*
- **கன்னி** – *அபூர்வ சந்திப்பு, தெய்வ சிந்தை, காரிய நன்மை, களஸ்திரசுகம்.*
- **துலாம்** – *ஆரோக்கியம், தொழில்சிந்தை, போசன சுகம், காரிய அனுகூலம்.*
- **விருச்சிகம்** – *தாழ்ந்த சுபாவம், வீண்பிரச்சினை, முயற்சி தாமதம், பணக்குறைவு.*
- **தனுசு** – *புதிய விடயம், முயற்சி தாமதம், ரோக நிலை, உறவினர் சந்திப்பு.*
- **மகரம்** – *நல்ல முயற்சி, போசனசுகம், சகோதரர் உதவி, பொருள் சேர்க்கை.*
- **கும்பம்** – *தனவிரயம், காரிய அலைச்சல், கோபப்படுதல், நண்பர்கள் சந்திப்பு.*
- **மீனம்** – *தெய்வ சிந்தை, நல்ல முயற்சி, போசன நன்மை, புதிய தகவல்.*

**பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது**

**- வளவன்**

# கலை முதற்தேர்வு மாணவர்கள் விசனம்

யாழ.பல்கலைக்கழக வெளிவாரி பரீட்சைகள் அலகின் கலை முதற்தேர்வு முடிவுகள் யாவும வரும் பெப்ரவரி மாதத்தில் வெளியிடப்படும் என தெரியவருகிறது.

வெளிவாரி வணிக முதற் தேர்வு முடிவுகள் கலை முதற்தோவு முடிவுகளுடன் இணைத்து ஒரே நேரத்தல் வெளியிடப்படும் எனப் பரீட்சைகள் அலகினால் அறிவிதத போதும் வணிக முதற் தேர்வு முடிவுகள் அண்மையில் வெளியாகியுள்ளன.

பரீடசைகள் நடைபெற்று ஒரு வருட காலத்திற்கு மேலாகியும் பெறுபேறுகள் வெளிவராமைக்கு வெளிவாரி பரீட்சை அலகின் அசமந்தப் போக்கே காரணம் என மாணவர்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (ப-74)

# ஒஸாமா பின்லேடன் சவூதி மீது குற்றஞ்சாட்டு



(கெய்ரோ)

சர்வதேச தீவிரவாதி ஒசாமா பின்லேடன் தனது ஓடியோ டேப்பில் சவூதி அரேபியா மீது குற்றம் சாட்டியுள்ளார்.

இஸ்லாமிய இணையத்தளத்தில் அவரது இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது. அதில் கேட்கும் குரல், பின்லேடனுடையதான் என அமெரிக்க அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

சவூதி அரேபியாவில் அமெரிக்க தூதரகத்தைத் தாக்கியவர்களை பின்லேடன் பாராட்டியுள்ளார். கடவுளின் விதிகளுக்கு முரணாக சவூதி அரேபியா செயல்படுவதாகவும் அமெரிக்காவை ஆதரிப்பதாகவும் குற்றம் சாட்டியுள்ளார்.

சவூதியில் அரசுக்கும் மக்களுக்கும் இடையே முரண்பாடுகள் எழுந்துள்ளதாகவும் கூறியுள்ள பின்லேடன் இஸ்லாம் நடைமுறைகளைப் போதிய அளவில் சவூதி கடைப்பிடிக்கவில்லை என்றும் கூறியுள்ளார். (க-7)



மும்பையில் மிஸிஸ் இந்தியா 2004 (உலக அளவில்) பட்டத்திற்கான அழகிப்போட்டி திருமணமான பெண்களிடையே நடைபெற்றது. இதில் ஜீவிகாஷா வெற்றி பெற்றார் (மத்தியில்). அவருக்கு கிரீடம் அணிவிக்கப்பட்டது. 2வது இடத்தைப் பிடித்த அருணிமாதத்தா (வலது), 3வது இடத்தை பிடித்த சப்னாசர்மா (இடது) ஆகியோர் உடன் உள்ளனர்.




# ஐ.நா.பாதுகாப்புச் சபையில் வீட்டோ அதிகாரத்துடன் பதவி

## மறுக்கிறார் கோபி அனான்

(வோஷிங்டன்)

ஐ.நா.பாதுகாப்பு கவுன்சிலில் கூடுதலாகச் சேர்க்கப்படும் நிரந்தர உறுப்பினர் நாடுகளுக்கு வீட்டோ அதிகாரம் வழங்க முடியாது என்று ஐ.நா.பொதுச் செயலர் கோபிஅனான் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

ஐ.நா.பாதுகாப்புக் கவுன்சிலில் தற்போது நிரந்தர உறுப்பினர்களாக ஐந்து நாடுகள் மட்டுமேயுள்ளன. இரண்டு ஆண்டு காலப் பதவியில் பத்து நாடுகள் உளளன. பாதுகாப்பு கவுன்சிலை மாற்றி அமைக்க வேண்டும். கூடுதலாக சில நாடுகளை நிரந்தர உறுப்பினர் நாடுகளாக சேர்க்க வேண்டும் என்ற கோரிக்கை வலுத்துள்ளது.

இந்தியா, ஜப்பான், பிரேசில், ஜேர்மனி போன்ற நாடுகளும் தங்களுக்கு நிரந்தர உறுப்பினர் பதவி வழங்கவேண்டுமென்று கோரிவருகின்றன. இது குறித்து ஆராய்ந்து பாந்துரைகள் வழங்க உயர்மட்டக்கமிட்டி ஒன்றை ஐநா.பொதுச்செயலர் கோபிஅனான் நியமித்தார். அந்தக் கமிட்டியும் தனது பரிந்துரைகளை வழங்கியுள்ளது.

அவையாவன,

* ஐ.நா.பாதுகாப்பு சபையில் நிரந்தர உறுப்பினர்களாக ஆறு நாடுகளைக் கூடுதலாகச் சேர்க்கலாம். ஆனால், அந்த நாடுகளுக்கு வீட்டோ அதிகாரம் வழங்கக்கூடாது.
* நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை புதுப்பிக்கும் வகையில் எட்டு நாடுகளைப புதிதாகப் பாதுகாப்புக் கவுன்சிலில் சேர்க்க வேண்டும்.
* இந்த இடங்களுக்கு உலகளவில் பல பிராந்தியங்களும் இடம்பெறும் வகையில நாடுகள் தேர்ந்தேடுக்கப்பட வேண்டும்.

இந்நிலையில் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் கொலின் பவெல்லை ஐ.நா. பொதுச்செயலர் கோபிஅனான் சந்தித்துப பேசினார். அதன்பின் நிருபர்களைச் சந்தித்த அவர், ஐ.நா.பாதுகாபபுக் கவுன்சிலில் நிரந்தர உறுப்பினர் அந்தஸ்தைப் பெற்றுவிட வேண்டும் என்று பல நாடுகள் தீவிரமாக இருக்கின்றன.

அதற்காக அந்த நாடுகள் சர்வதேச அளவில் பிரசாரத்திலும் ஈடுபடும் அதே சமயம் நிரந்தர உறுப்பினர் அந்தஸ்து கோரும் நாடுகளின் பிரசாரத்தை முறியடிகக வேறு சில நாடுகள் செயல்படுகின்றன.

மேலும் ஐ.நா.பாதுகாப்பு கவுன்சிலை விஸ்தரிக்க தேவையில்லை என்று பல நாடுகள் கூறுகின்றன.

சர்வதேச அளவில் பல நாடுகளின் பிரதிநிதிகள் ஐ.நாவில் இடம்பெறுவது நல்லது. எதிர்காலத்தில் ஐ.நா. மிகச் சிறந்த உலக அமைப்பாக இருக்க வேண்டும்.

இன்னும் 1945ஆம் ஆண்டை நோக்கி செயல்படுவதாய் இருக்கக்கூடாது. அதேசமயம் கூடுதலாக நிரந்தர உறுப்பினர் பதவி கேட்கும் நாடுகளுக்கு வீட்டோ அதிகாரம் வழங்கமுடியாது அதில் உள்ள சிக்கல்களை ஐ.நா.உறுப்பு நாடுகள் புரிந்துகொள்ளும் என்று நம்புகிறேன் என்றும் கோபிஅனான் கூறினார்.

(க-7)




வோஷிங்டனில் அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ நுண்ணறிவு சீர்திருத்தம் மற்றும் தீவிரவாத தடுப்பு சட்டத்தில் கையெழுத்திட்டபோது எடுக்கப்பட்ட படம்.



மெக்சிகோ நகரில் உள்ள தேசிய வரலாற்று இன்ஸ்டியூட்டில் 2300 ஆண்டுகளுக்கு முன்னால் வாழ்ந்த ஒரு சிறுமியின் எலும்புக்கூடு (மம்மி) பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது.

மெக்சிகன் மாநிலத்தில் உள்ள சியாரா கோர்டா குகை ஒன்றில் இந்த மம்மி கண்டெடுக்கப்பட்டதாம். (க-7)

# பட்டாசு தொழிற்சாலையில் தீவிபத்து 3பேர் உடல்சிதறிப் பலி 5 பேர் படுகாயம்



(காஞ்சிபுரம்)

பட்டாசு தொழிற்சாலை தீவிபத்தில் 3 வாலிபர்கள் உடல்கருகிப் பரிதாபமாக இறந்தனர். இரண்டு பெண்கள் உட்பட 5பேர் பலத்த காயமடைந்தனர். 3பேரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது.

இந்தக் கோரவிபத்துப் பற்றி பொலிஸார் கூறியதாவது,

வழக்கம்போல் ஊழியர்கள் நேற்று முன்தினம் காலை பணிக்கு வந்தனர். சிறிது நேரத்தில் பட்டாசு தொழிற்சாலை மேற்பார்வையாளரும் உரிமையாளரின் மகனுமான ரமேஸ் அங்கு வந்தார். ஊழியர்களுடன் அமர்ந்து பணியில் ஈடுபட்டார். அப்போது அந்த அறையில் அடுக்கிவைக்கப்பட்டிருந்த வெடிகளிலிருந்து புகை வந்தது. ஊழியர்கள் அதிர்ச்சியடைந்தனர். தண்ணீர் மற்றும் மணல் எடுத்து வருவதற்காக சிலர் வெளியில் ஓடினர். அவர்கள் வெளியேறிக்கொண்டிருந்தபோதே பட்டாசுகள் வெடிக்கத் தொடங்கின. வெளியே வர முயன்ற ஊழியர்கள் பீதியில் அலறினர்.

சிலர் தப்பியோட முயன்றனர். சிலர் உடல் ஊனமுற்ற ரமேஸைக் காப்பாற்றி வெளியே கொண்டுவர முயன்றனர். அப்போது பட்டாசுகள் அனைத்தும் ஒன்றுசேர பயங்கர சத்தத்துடன் வெடித்துச் சிதறின. அறையில் சிக்கிக்கொண்ட 3 பேர் அதே இடத்தில் உடல் சிதறி சின்னாபின்னமாக சிதைந்து கருகிச் செத்தனர்.

அருகில் வசிப்பவர்கள் சத்தம் கேட்டு அலறி அடித்துக்கொண்டு ஓடி வந்தனர். தீயணைப்பு நிலையத்துக்குத் தகவல் தெரிவித்தனர். மாவட்டத் தீயணைப்பு அலுவலர் விஜயகுமார் தலைமையில் வீரர்கள் விரைந்து வந்து தீயை அணைத்தனர். மட்புப்பணியில் ஈடுபட்டனர். வீரர்கள மீடபுப் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போதும் பட்டாசுகள் வெடித்துக்கொணடிருந்தன. வீரர்கள் உடல்களை மீட்டனர்.

இறந்தவர்கள் அடையாளம் காணப்பட்டனர். பலத்த காயமடைந்த அனைவரும் காஞ்சிபுரம் அரச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். படுகாயமடைந்து உயிருக்கு ஆபத்தான நிலையில் 3பேர் கீழ்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு கொண்டுசெல்லப்பட்டனர். முறையான பாதுகாப்பு நடவடிக்கை எடுக்காமல் வெடிபொருட்களை குவித்து வைத்திருந்ததுதான் விபத்துக்குக் காரணம் என்று கூறப்படுகிறது. (ப)



எள்ளாத எண்ணிச் செயல்வேண்டும் தம்மொடு
கொள்ளாத கொள்ளது உலகு - குறள்

வலம்புரி

# தென்னிலங்கையில் வலுவிழக்கும் சமாதான சக்திகள்

யுத்தமும் சமாதானமும் மனம் சார்ந்த விடயம் என்பது யுனிசெவ் நிறுவனத்தின் ஆய்வு முடிபு. அவ்வகையில் இலங்கையில் சமாதானம் ஏற்படவேண்டுமாயின் தென்னிலங்கை மக்களிடமும், சிங்கள அரசியல் கட்சிகளிடமும் அதற்கான மனநிலை உருவாக வேண்டும்.

எனினும் அங்கு அத்தகைய மன உருவாக்கம் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. மாறாக மீண்டும் ஓர் யுத்தத்தை ஏற்படுத்துவதற்கான கள நிலைகளையே ஜனாதிபதி, ஜே.வி.பி, சிஹல உறுமய உள்ளிட்ட இனவாதிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

மீண்டும் ஓர் யுத்தத்தை ஏற்படுத்துவதன் மூலம் விடுதலைப் புலிகளை வலுவிழக்கச் செய்யமுடியும் என்பது அரசின் கனவு. விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சு நடத்தி இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு முன்னதாக மீண்டும் ஒரு தடவை யுத்தத்தை நடத்தினால் என்ன? என்ற மன உணர்விலேயே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு உள்ளது. இதற்கு ஜே.வி.பி, சிஹல உறுமய, சிங்கள இனவாதக் கட்சிகளும், பௌத்த பீடமும் உறுதுணையாக இருக்கின்றன.

இதேவேளை சமாதானத்தை விரும்புவதாக - சமாதானத்திற்காகவே பாடுபடுவதாகத் தம்மைக் கூறிக்கொள்ளும் தென்னிலங்கை அமைப்புகள் இப்போது மௌனம் காக்கின்றன. அதிலும் சமாதானத்தை வலியுறுத்துவதாகக் கூறிக்கொண்டு யாழ்ப்பாணத்திற்கு வருகைதந்த பல்வேறு சிங்கள அமைப்புகளும் இன்று தாம் அளித்த உத்தரவாதங்களை மறந்து மௌனித்துப் போயுள்ளன.

இவை ஒருபுறம், மறுபுறத்தில் ஐக்கிய தேசிய முன்னணி அரசும், விடுதலைப் புலிகளின் அமைப்பும் செய்துகொண்ட யுத்தநிறுத்த உடன்படிக்கையில் விளைவாக ஏ-9 பாதை பயணத்திற்காக திறந்துவிடப்பட்டது. இதனால் தென்னிலங்கை சிங்கள மக்கள் தாராளமாக யாழ்ப்பாணத்திற்கு வந்துபோனார்கள். அவ்வாறு அவர்கள் யாழ்ப்பாணத்திற்கு வந்தபோது தமிழ் மக்கள் மீது அனுதாபம் கொண்டவர்களாக - தமிழ் மக்களின் உரிமைகளை மதிப்பவர்களாகவே தங்களை காட்டிக் கொண்டனர்.

இதனை தமிழ் மக்களும் நம்பிக்கொண்டார்கள். ஆனால், சிங்கள மக்களின் யாழ்ப்பாணத்திற்கான வருகை தமிழ் மக்கள் மீது அனுதாபப்பட்டோ, அன்றி சமாதான சூழ்நிலைக்கு வலுச் சேர்ப்பதாகவோ அமையவில்லை. மாறாக யாழ்ப்பாண மண்ணில் சிங்கள பௌத்தர்கள் வாழ்ந்தார்கள். யாழ்ப்பாண மண்ணும் பௌத்த சிங்களத்தின் பூர்வீகம் என்பதை நிரூபிப்பதற்காகவே அவர்களின் வருகை அமைந்திருந்தது.

இதனை கந்தரோடையில் புதிதாக அமைக்கப்பட்ட புத்தரின் சிலை, நயினாதீவில் சிங்கள மக்கள் கொண்டுள்ள கரிசனை, யாழ். ஆரியகுளப் பகுதியில் உள்ள நாகவிகாரையை சிங்களப் பிரதேசம் போல மாற்றியமை போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

20 வருட கால யுத்தம் நடந்தபோதிலும், அதன் ஓய்வு நிலையை சிங்கள் மக்கள் தமது இனத்தை - மதத்தை வலுப்படுத்துவதற்காக பயன்படுத்துகின்றார்களே தவிர தமிழ் மக்கள் பிரச்சினையை தீர்த்து நாட்டில் அமைதியை - சமாதானத்தை ஏற்படுத்த வேண்டும் என எண்ணவில்லை. அவ்வாறாயின் சமாதானம் என்ற கோஷத்தோடு தென்னிலங்கையில் இருந்து வடக்கு நோக்கி வந்த சுகிரைப் பயணங்கள், துவிச்சக்கர வண்டி ஓட்டங்க[illegible]ாதை யாத்திரைகள், சுலோகங்கள் தாங்கிய வா[illegible]ப் பயணங்கள், பாடசாலை மாணவர்களின் உறவுப் பரிமாற்றங்கள், பல்கலைக்கழக மாணவர்களின் சுற்றுலாக்கள், பௌத்த பிக்குகளின் வருகைகள், பத்திரிகையாளர்களின் தகவல் பரிமாற்றங்கள், கலைஞர்களின் உறவுப் பாலங்கள் எல்லாம் தமிழ் மக்களை ஏமாற்றும் வித்தை என்பதை காலம் கடந்தேனும் புரிந்துகொள்ள வேண்டியதாயுள்ளது.

சுருங்கக் கூறின், சமாதான சக்திகள் என்று தம்மை இனங்காட்டிக் கொண்ட தென்னிலங்கை அமைப்புகள் இன்று வலுவிழந்து போகலாயின. அவற்றின் போலி வேடங்கள் கலையலாயின. ஆக, இப்போது தென்னிலங்கை தமிழ் மக்கள் மீது மீண்டும் ஓர் யுத்தத்தை பிரகடனப்படுத்த தயாராகியுள்ளது.

# ஜே.வி.பி.யின் உண்மையான நிலைப்பாட்டை சர்வதேசமும் தெளிவாகப் புரிந்து கொண்டுள்ளன

## இது வரவேற்கத்தக்கது என்கிறார் திஸ்ஸ அத்தநாயக்க

(கொழும்பு)

சமாதான முயற்சிகள் வெற்றியளிக்காமைக்கும், சர்வதேச சமூகத்திடமிருந்து உதவிகள் கிடைக்காமைக்கும ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நடவடிக்கைகளும், அணுகுமுறைகளுமே காரணம் என ஐக்கிய தேசியக்கட்சியின பிரதிப் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்துள் அங்கம் வகித்து சமாதான நடவடிக்கைகளில் ஜே.வி.வி.என்றும் இனவாதக்கட்சி இடைவிடாது தடைகளை ஏற்படுத்திக் குழப்பி வருகின்றது.

இது எமது கட்சிக்கும் நாட்டு மக்களுக்கும் இதுவரை தெரிந்த விடயமாகக் காணப்பட்டது. ஆனால், இது தற்போது சர்வதேச சமூகத்துக்கும் தெளிவாகத் தெரிந்துள்ளமை, டோக்கியோ உதவி வழங்கும் நாடுகளின் இணைத்தலைமையால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலிருந்து புலனாகின்றது.

ஜே.வி.பி.யினர் ஆட்சியின் அரைவாசியைப் பெற்றும் அவர்கள் தொடர்ந்து கடைப்பிடிககும் இனவாதப் போக்கும், விதண்டாவாத நடவடிக்கைகளும் மக்களை வெறுப்பேற்றியுள்ளன.

இதனால் நாட்டு மக்களுக்குக் கிட்டவுள்ள சுமார் 45ஆயிரம் கோடி ரூபா பெறுமதியான வெளிநாட்டு உதவியும் இல்லாமல் போகும் அபாயமும் தோன்றியுள்ளது.

நோர்வே, ஜப்பான் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் இது தொடர்பாக ஜனாதிபதிக்கு சுட்டிக்காட்டியுள்ளன எனவும திஸ்ஸ அத்தநாயக்க மேலும் தெரிவித்தார். (ற-4)

# ஆட்சியில் இருப்பவர்களுக்கு வேறு நியாயமா?

## ஜனாதிபதியின் குற்றச்சாட்டுக்கு மகேஸ் பதிலடி

(கொழும்பு)

அண்மையில் பாராளுமன்றத்தில் நடைபெற்ற வரவு-செலவுத் திட்ட குழுநிலை விவாதத்தின் போது அங்கு நடைபெற்ற சில சம்பவங்களைக் குறிப்பிட்டு, அதில் எதிர்ககட்சியினதும், ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினராகிய தன் மீது ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கடந்த சில நாட்களாக பாரிய குற்றச்சாட்டுக்களைச சுமத்தி வருகிறார் என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கருத்துத் தெரிவிக்கையில், கடந்த 7மாத காலத்திற்கு முன்பாக அவருடைய அரசு தரப்பிலே அவருடைய அமைச்சரவையிலே இருக்கின்ற அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள் புரிந்த குற்றச்சாடடுகள் குறித்தும், இரண்டு தடவைகள் பாராளுமன்றத்தில் செங்கோலை எடுத்துச் சென்ற சம்பவம் குறித்தும் ஜனாதிபதிக்கு நினைவுபடுத்துகின்றேன்.

அவருடைய மந்திரி சபையில் இருக்கின்ற அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர் கூட இவ்வாறான அசம்பாவிதங்களில் பிரதான பங்கு வகித்திருந்தார்.

அதுமாத்திரமல்ல சபாநாயகர் தெரிவின் போது பாராளுமன்றம் கூடும் வேளையில் பௌத்த பிக்குகளை வாக்களிக்க விடாமலும், எதிர்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களை தங்கள் சார்பாக வாக்களிக்க நிர்ப்பந்திக்கினற வகையிலும் பாராளுமன்றத்தில அரச தரப்பினர் மேற்கொண்ட நடவடிக்கைகளை அனைத்துத் தரப்பினரும் நன்கு அறிவர்.

அந்த வகையில், ஜனாதிபதி உள்ளிட்ட அவரது ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பைச் சேர்ந்தவர்கள, பிரதான அமைச்சர்கள் கூட சபாநாயகர் தெரிவின் போது வாக்குப்பெட்டிக்கு மேல் ஏறி அதன் நடுவே இருந்ததை ஜனாதிபதிக்கு நான் சுட்டிககாட்ட விரும்புகின்றேன் எனவும் குறிப்பிட்டார். (ற-4)

## ஈழத்து சிதம்பர உற்சவத்தை ஒட்டி

# காரைநகருக்கான சிற்றூர்தி சேவைகள் விஸ்தரிக்கப்பட்டுள்ளன

காரைநகர் ஈழத்துச் சிதம்பர ஆலயத்தின் திருவாதிரை உற்சவ காலத்தில் பக்தர்களின் நலன்கருதி விசேட போக்குவரத்துச் சேவையை நடத்த காரைநகர் சிற்றூர்தி சேவையினர் ஏற்பாடுகளைச் செய்துள்ளனர்.

காரைநகர் ஈழத்துச் சிதம்பர திருவாதிரை உற்சவம் நேற்று ஆரமபமாகித் தொடர்ந்து நடைபெற்றுவருகிறது. இக் காலத்தில் யாழ்.குடாநாட்டின் பல பகுதிகளில் இருந்தும் தென்பகுதி மற்றும் வெளிநாட்டவர்கள் என பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.

இதனால் உற்சவ காலங்களில் யாழ்ப்பாணத்தில் இருந்து காரைநகர் செல்லும் அனைத்து சிற்றூர்திச் சேவைகளும் காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தினூடாக செல்லும் என்றும் அதேவேளை, காரைநகரில் இருந்து யாழ்ப்பாணம் வரும சிற்றூர்திகளும் ஈழத்துச் சிதம்பரத்தினூடாக தமது சேவையை நடத்தவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

உற்சவகால இறுதி இருநாட்களும் அதிகாலை ஐந்து மணி தொடக்கம் யாழ்.பஸ் நிலையத்தில் இருந்து விசேட சேவைகள் இடம்பெறும் எனவும் விசேடமாக குறுகிய தூர பாதையான 784ஆம் இல பாதையினூடாக விசேடசேவைகள் நடைபெறவுள்ளதாகவும் காரைநகர் சிற்றூர்திச் சேவைச் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். (ப-246)

# எஸ்.பியை எதிர்வரும் 28ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராக்க உத்தரவு

(கொழும்பு)

நீதிமன்றத்தை அவமதித்த குற்றத்திற்காக கைது செய்யப்பட்டு வெலிக்கடைச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸநாயக்கவை எதிர்வரும 28ஆம் திதகி கொழும்பு நீதிமன்றில் ஆஜராகுமாறு நேற்று உத்தரவிடப்பட்டுள்ளது.

இவர் 1994 மார்ச் 31ஆம் திகதிக்கும் 2001 செப்ரெம்பர் 30ஆம் திகதிக்குமிடையில் 2கோடி 90 இலட்சம் பெறுமதியான சொத்துக்களை சட்டவிரோதமான முறையில் சேர்த்துள்ளதாக லஞ்ச ஊழல் ஆணைக்குழு கொழுமபு மேல் நீதிமன்றத்தில் வழக்கொன்றை தாக்கல செய்திருந்தது.

இநத வழக்கை விசாரணைக்கு ஏற்றுக்கொண்ட நீதிபதி சிசிற டீ ஆப்று மேற்கண்ட உத்தரவை நேற்றுப் பிறப்பித்துள்ளார்.

இதேவேளை, ஐக்கிய தேசியக்கட்சியில் இருந்து ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் இணைந்து அமைச்சர் பதவி ஏற்றுளள ரோகித போகல்லாகம ஐ.தே.க.விலிருந்து தான் நீக்கப்பட்டதை ஆட்சேபித்து நேற்றுக் கொழும்பு உயர் நீதிமன்றத்தில் மனுவொன்றை தாக்கல் செய்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, தவிசாளர் மலிக் சமரவிக்கிரம, செயலாளர் எம்.டி.கே.வேரகொட ஆகியோரை பிரதிவாதிகளாகக் குறிப்பிட்டுள்ள அவர் தன்னை கட்சியிலிருந்து நீகக கட்சி எடுத்த தீர்மானம் சட்ட விரோதமானது என நீதிமன்றம் உத்தரவிட வேண்டும் என்று தனது மனுவில் கேட்டுள்ளார். (ச-4)

# வேலணை கடைக்காரருக்கு பிரதேசசபை அறிவுறுத்தல்

வேலணை பிரதேசசபைக்குச் சொந்தமான வேலணை வங்களாவடி தொகுதிக்கடைகளின் ஒப்பந்த உரிமையாளர்கள் ஒருமாத காலத்துக்குள் தம்மை அடையாளப்படுத்தி உரிமையினை உறுதிபடுத்த வேண்டுமென வேலணை பிரதேசசபை தெரிவித்துள்ளது.

குறித்த கடைகளின் வாடகை நிலுவைகளை முழுமையாக செலுத்தி மீள விலை மதிப்பீட்டின் பிரகாரம ஒப்பந்தங்களை செய்யுமாறும், தவறும் பட்சத்தில் குறித்த கடைகள் மீள் விலை மதிப்பீட்டின் பிரகாரம் புதிதாக கேள்விகள் கோரப்பட்டு புதியவர்களுக்கு குத்தகைககு கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் வேலணை பிரதேசசபை செயலாளர் செ.சண்முகராசா தெரிவித்துள்ளார். (க-126)

## ஓம் தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

பரம்பொருள் இயற்கையாக மாற வேண்டுமானால் அது காலம், இடம், காரண காரியம் இவற்றால் கட்டுப்பட வேண்டும். நம்மிடம் உள்ள சக்தி எல்லைக்கு உட்பட்டது. நீங்கள் அதை ஓர் இடத்தில் பயன்படுத்தலாம். இன்னோர் இடத்தில் இழக்கலாம். ஆனால் மொத்தச் சக்தி என்னவோ எப்போதும் ஒன்றுதான்.

சுவாமி விவேகானந்தர்

# LONDON LANGUAGE SCHOOL

"THE SCHOOL WITH GOLDEN TOUCH"

எமது கல்வி நிறுவனத்தின் முதல் தொகுதியில் முதலிடங்களைச் சுவீகரித்த மாணவர்களின் விபரம்

1ST CLASS - MISS S.ABIRAMI
2ND CLASS UPPER - MISS S.SUKANIYA
2ND CLASS UPPER - MR. U.PREMAKANTH
2ND CLASS LOWER - MR. S.SIVA
3RD CLASS - MR.T.KARTHEESWARAN

WE CONGRATULATE ALL OUR FIRST BATCH STUDENTS

"BEST OF LUCK & SEASON GREETINGS"

774, HOSPITAL ROAD, JAFFNA
T.P - 0777 222 300, 0777 238605, 0776176383

(C/902)


## சமாதானப் பேச்சை...

களும் அறிவிக்கப்படும். புதிய அரசியல் வேலைத் திட்டங்களை வரையறுப்பதற்கு ஜனாதிபதி தலைமையில் விசேட குழு ஒன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஆளும் கூட்டணி அரசில் அங்கம் வகிக்கும் ஜே.வி.பி கட்சியின் செயற்பாடு, சமாதான முயற்சிகள் பாதிப்படைந்துள்ளதாக சர்வதேச சமுகம் ஜனாதிபதிக்கு தீர்க்கமாகச் சுட்டிக்காட்டியுள்ளதுடன் அத்தகைய சிக்கல்களை நீக்கி உடனடியாக சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்குமாறு வலியுறுத்தியிருப்பது குறிப்பிடத்தக்கது.(த-04)

## எரிக்...

தும் வாகனம் ஒழுங்கு செய்யப்படும் வரை அவர் அந்த சிறிய பாடசாலையின் நூலகத்திலேயே சுமார் 30 நிமிடங்கள் வரை தங்க நேரிட்டது.

விமானப் படையினர் இருவர் மற்றும் பாடசாலையில் க.பொ.த. சாதாரண தர பரீட்சை பாதுகாப்பு கடமைகளில் ஈடுபட்டிருந்த இரண்டு பொலிஸாரைத் தவிர வேறு விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் எதுவும் அங்கு அவருக்கு இருக்கவில்லை.

உலங்குவானூர்தியில் வந்திறங்கியவர்கள் யார் என்ற விளக்கம் அங்கிருந்தவர்களுக்கு அளிக்கப்படவில்லை. இதனால் அவர்களும் இதனை பெரிதாகக் கருதவில்லை.

மறுநாள் ஜனாதிபதியுடன் சந்திப்பு இடம்பெற்றுக் கொண்டிருந்த சமயம் அவரது கையடக்க தொலைபேசிக்கு நோர்வே தூதுவராலயத்திலிருந்து தொடர்பு ஒன்று வந்தது.

அதில் அந்திராக்ஸ் கடிதம் பற்றிய தகவல் அவருக்கு தெரிவிக்கப்பட்டபோது அவரது முகத்தில் மாறுதல் ஏற்பட்டது. அப்போது தான் ஜனாதிபதிக்கு அந்த விடயம் என்ன என்பது தெரிய வந்தது.

இதேவேளை தனது இலங்கைக்கான 4 நாள் விஜயத்தை முடித்துக் கொண்ட எரிக் சொல்ஹெய்ம் நேற்று முன்தினம் மாலை புதுடில்லி சென்றடைந்தார்.

இலங்கையில் தாம் மேற்கொண்ட சந்திப்புகள் தொடர்பாக இந்திய வெளியுறவு அமைச்சு அதிகாரிகளுக்கு விளக்குவதற்காகவே அங்கு அவர் சென்றுள்ளார்.

(த-04)


# COMPUTER WORLD

தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் சேவைகள்

- INTERNET CALLS
- LOCAL and IDD Screen printing } min 8/=
- SELF Practicals - HOUR 40/=
- Computer Games
- COLOUR photo copy - Hour 40/=
- E-Mail Services - Hour 50/=

வெகு விரைவில் ஆரம்பமாகும்.

- ON LINE CLASSES - Hour 40/=
- INTERNET BROWSING - Hour 50/=

பதிவுகளை முன்கூட்டியே செய்து கொள்ளவும்.

COMPUTER WORLD
7th MILE POST
Chankanai
JAFFNA

(c/901)


# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



பி.தி 1922 – 01 – 28

உ.தி 19 – 11 – 2004

## கந்தர் அம்பலவாணர்

வாழ்க்கை என்னும் பாதையிலே
கட்டிட மேதையாய் கோயில் சிற்பியாய் திகழ்ந்தாய்
முதுமையிலே தனிமையை நாடினாய்
எம்மை ஆறாத் துயரில் விட்டு இறைவனடி சேர்ந்தாய்
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்

**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்**

(9115)

# நூல் வெளியீட்டு விழா

## பாலர் புராமரிப்பு

**ஆக்கம்**

கா. வைத்தீஸ்வரன் (ஓய்வுபெற்ற சுகாதாரக் கல்வி அதிகாரி)

**இடம்**
இணுவில் மஞ்சத்தடி
அரசோலை விநாயகர் கோவில

**காலம்**
19.12.2004 ஞாயிறு
பி.ப. 4.30 மணி

**தலைமை**
திரு. பெ. கனகசபாபதி J.P

**பிரதம விருந்தினர்**
பேராசிரியர்
தயா சோமசுந்தரம்
(மருத்துவபீடம், யாழ்ப்பாணம், பல்கலைக்கழகம்)

**சிறப்பு விருந்தினர்**
Dr. R. தெய்வேந்திரன்,
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், யாழ்ப்பாணம்

திரு. P. நடராசா,
அண்ணா நிறுவனம், இணுவில்

திரு. க. தேவராசா,
தலைவர், வணிகத்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

**வாழ்த்துரை**
Dr. R. தெய்வேந்திரன

**நூல் வெளியீட்டுரை**
Dr. N. சிவராசா
(சுகாதார அபிவிருத்தி ஆலோசகர் (W.H.O) வடகிழக்கு மாகாணம)

**முதற்பிரதி வழங்குதல்**
பெறுபவர் Dr. M. பஞ்சலிங்கம
(இணுவில்)

**நூல் ஆய்வுரை**
திரு. ந. விஜயசுந்தரம்
(ஆசிரியர், வலம்புரி யாழ்ப்பாணம்.)

**நூல் விமர்சனம்**
பேராசிரியர் சபா ஜெயராசா
தலைவர், கல்வித்துறை
யாழ். பல்கலைக்கழகம்

**பிரதம விருந்தினர் உரை**

**நன்றியுரை – ஏற்புரை**
*கா. வைத்தீஸ்வரன்*


# சிவா வீடியோ லைபிறறி

பிறந்தநாள், பூப்புனித நீராட்டு, திருமணம் ஏனைய நிகழ்வுகள் அடங்கிய பழைய, புதிய வீடியோ பிரதிகளை (V.H.S கொப்பி) சிறந்த வீடியோ சீடியாக (V.C.D) மாற்றம் செய்தும், D.V.Dயில் உள்ளவற்றை V.C.Dயாக மாற்றியும் தரப்படும். கொப்பிகளையும், சீடிக்களையும் குறைந்த விலையில் மறுபிரதி செய்தும் தரப்படும்.

சிவா விடியோ லைபிறறி
இராமலிங்கம் வீதி, முடமாவடி
(பூங்கனிச்சோலை அருகில்) T.P- 222 7152
(C/850)


# நெஞ்சம் நெகிழ்ந்த நெடுமழைக் கண்ணோடு கரைந்த மூன்றாண்டு!



## வல்லிபுரம் சிவராசா (V.S)

(உரிமையாளர் கிருபா சவுண்ட் சேவீஸ் - அல்வாய்)

திதி : 19.12.2004

எமக்கெல்லாம் ஒளி தந்த குலவிளக்கே
எம்முழுமை காணமுன்னே - அந்தக்
கண்கெட்ட காலனவன் காவுகொண்டு
ஆண்டுகள் மூன்றான போதும்
நேற்று நடந்த மாதிரியிருக்கிறதே!
தேற்று மொழியேதுமின்றித் தேம்புகின்றோம்
நின் நினைவுகளைச் சுமந்து வாடுகின்றோம்!

நக்கீரன் வீதி
அல்வாய் வடக்கு,
அல்வாய்.

**குடும்பத்தினர்**

(9092)

# Public Meeting

## "whither the peace Process?"

**Speakers**

**Dr.Lakshman Marasinghe**
Member of the Constitutional Affairs Committee,
and
Director - Legal, The Peace Secretariat

**Prof. Ranjith Amarasinghe**
Dept. of Political Science, University of Peradeniya

**Followed by**

"ஒதுக்காதி ஒதுக்கன்" (OTHUKKATHI OTHUKKAN)
A musical street play on the issue of Conflict and its Transformation

*Venue* : Navalar Cultural Hall, Anaipanthy
*Date & Time* : December 19, Sunday 2004
4.00 -6.00 pm

**ALL ARE WELCOME!**

Viluthu, Centre for Human Resource Development

(9203)


# நாதன்ஸ் சினிமா

யாழ்ப்பாணம் (குளிரூட்டப்பட்டது)

பிரசன்னா, நவ்யா, பிரகாஸ்ராஜ் நடித்த



அழகிய தீயே

கா.நேரம் : 10.30, 2.30, 6.30 (பு.நே)

தினசரி இரவு 9.00 (பு.நே) மட்டும் THE MUMMY RETURNS (ஆங்கிலப் படம்)

விரைவில் THE PASSION OF The CHRIST
(இயேசு தேவரின் வாழ்வில் இறுதி 12 மணி நேரக் கதை)

# ராஜா, யாழ்ப்பாணம்

சில தினங்கள் மட்டுமே
சரத்குமார், வடிவேல், நிதிகா நடிப்பில்

ஐதராபதி

காட்சி நேரம்:- 10.30, 2.30, 6.30, 9.30 மட்டும் (பு.நே)

# நிறைஞ் சனாஸ் (சங்கானை)

ஸ்ரீகாந், சினேகா நடித்த



போஸ்

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே)

வெள்ளி, சனி, ஞாயிறு இரவு (8.45 பு.நே) URASSIC PARK -3


இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.12.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.